KALANILAYAM                                    தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 4]          1931 ளு நவம்பர் மீ 26உ          [No. 47

பொருளடக்கம்.


1. தலையங்கம் (Leader) 921
2. சிதம்பரதேவர் சரிதம். Dr. V. S. அருணாசலம்பிள்ளை 923
3. சூளாமணி - (தூதுவிடு சருக்கம் 31—40) K. இராமரத்நம் ஐயர் B.A. 924
4. தமிழிரட்டையர் — (தோற்றுவாய்) M. P. குமாரநாயகம் 926
5. நவராத்திரி—(ஓர் நாடகம்) K. N. சுந்தரேசன் B.A. (Hons) 928
6. களவியற் காரிகை S. வையாபுரிப்பிள்ளை B.A. B.L. 932
7. யாப்பிலக்கணம் (வஞ்சிப்பா) 936
8. கம்பராமாயணம் (குகப் படலம்) T. N. சேஷாசலம் B.A. B.L. 937
9. வர்த்தமானம். 939


## க லா நி ல ய ம்

### நல்லாள் நகை. 4.

இப்படியே, அரசியல்முறைகள் வேண்டா, அதிகார வர்க்கங்கள் வேண்டா; கைத்தொழில் வர்த்தகங்கள் வேண்டா, வர்த்தமானப் பத்திரிகைகள் வேண்டா; கல்விச்சாலைகளும் வேண்டா, காவற்சேவகர்களும் வேண்டா;—என்றென்று இவை யொன்றும் இல்லாமலிருத்தலே இனிதென எல்லாவற்றையும் எதிர் மறுத்து விதிர்த்துவிட்டால் இனி மனிதரென்றிருப் போர்க்கெல்லாம் மற்றென்செயக் கிடக்கின்றது என்றொருவரும் ஏங்கவும் வேண்டா. குகைமனிதன் நகர்மனிதனை நாகரிக சரித்திரத்தை நடுக்கடலில் தள்ளிவிட்டுப் பின்திரும்பிப் போகவோ பேசுகின்றோம்? ஆமெனினும் அவமான மில்லை. திரும்பிப் போவதெல்லாந் தீதன்று. வாழ்க்கையைப் 'போர்' என்றழைக்கும் வழக்கிற்றான் புறந்தந்தோடிய புன்மை புலப்படும். மற்றிக் கலாநிலயமோ வாழ்க்கையின் அமைதிக்கே வருந்தி யழைக்கின்றது. இத்துணைப் பாடுபட்டு இழக்காமல் அந்நாகரிகத்தை எய்துதற்கே இயம்புகின்றோம். நாகரிகம் என்பதன் செம்பொருள் கண்ணோட்டமே யாகின்ற மெய்ம்மையை முப்பொழுதும் மறவாமை வேண்டும். எனின், கண்ணோட்டத்தைத் துடைத்தொழிக்கும் இப்பணத்திற்கு நாகரிகத்தில் சிறிதேனும் இடமில்லையே—கண்ணோட்டமில்லையாயின் வாழ்க்கையில் அமைதியுமில்லை. அமைதிக்கு அயலாயதொன்றும் முன்னேற்றமாகாது. இக்காலம் மேன்மேலும் அல்லலுக்காளாகும் கொள்கையையே முன்னேற்றமெனக் கூறுகின்றனர். வந்தவழியெல்லாம் முள்ளும் கள்ளியும் விதைத்து அடர வளர்த்துவிட்டதால் திரும்பிப்போகும் வகையற்றுத் திகைக்கின்றவர்களை முன்னேற்ற மடைந்துவருபவர் எனப் பாராட்டிப் பின்பற்ற விரையுமிவ் விரைச்சலைக் கேட்குந்தோறும் மேலோருள்ளம் மிக இரங்கும்.

நிலைமையின் அவலம் இன்னதே என்பது நிச்சயமாயபின்னர், இவ்வல்லலிலிருந்து நீங்குதற்கு ஏற்ற நெறி யாதென விருப்பமுடன் வினவுவோர்க்கு யாம் இரண்டொருசொல் இயம்பக் கடமைப்பட்டிருக்கின்றோம். எண்ணுதற்கு மியம்புதற்கு மரியதேனும் இயற்றுதற் கெளியகருமம் ஒன்றுளது. இலன் என இருதிறத்தும் எவ்வமுடன் விளைகின்ற இரவுங் கரவுந் தீரவேண்டுமாயின், உழுதுண்ணும் வாழ்க்கை யொன்றினாலேயே அந் நன்னிலை வந்தெய்தும் நீர்மையை நினையாது ஒழியலாமோ.

"இரவார் இரப்பார்க்கொன் றீவர் கரவாது, கைசெய்தூண்மாலையவர்" என்னுமத் திருவள்ளுவர் வாக்கு முன்னிங்கு நாம் உரைத்துவந்தவைகளில் பலவற்றைத் தன்னு ளடக்கிக்கொண்டிருக்கக் காணலாம். அதுவுமன்றி, "சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம் அதனால் உழந்தும் உழவே தலை" என்னுங் குறளில், கலங்கவில் காட்சித் தெய்வமாப்புலவர் யாம் இன்று இயம்பவருவதைப் பன்னூறாண்டுகளுக்கு முன்னரே பகர்ந்திருக்கின்ற மேன்மையை உற்றுணர்தல் வேண்டும். கலப்பையைக் கைவிட்டுக் கறங்குகொண்டு சுழல்கின்றமாந்தர் சோர்வடையத் தலைப்படுகின்றனர். வளவியவாழ்க்கையில் அமைதியுடன் வைகுத லொழிந்து, பெயரும் பொருளும் மாறுபட்டுநிற்கும் அந் நாகரிகம் என்னும் போரால் வாழ்க்கைப்போரில் (Struggle for existance) பலபடி சுழன்று பார்த்தாகிவிட்டது. வாழ்வாங்கு வாழவேண்டிய வாழ்க்கையோடுடன்றிழைத்த

விக் கடும்போரில் மனிதரே முற்றுந் தோற்றனர். தோற்றோமென்பதுந்தெரியாமல்நிற்பதுதான்மிக்கொடுமை. மற்றிதனைத்தெரிந்தவர் சிலர் தாம் தோற்றாலும் வாழ்க்கையையும் அழித்துவிட்டார்களெனத் தம்மை எண்ணிக்கொள்கின்றனர். இதுவும் பிழை. வாழ்க்கையோ அழியவில்லை. வர்த்தகம் உத்தியோகம் எந்திரம் முதலிய போர்க்கலங்களை முறித்தெறிந்து ஏர்க்கலங்களைக் காணிக்கையாகவைத்து மீண்டும் நாம் வாழ்க்கையின்பால் தஞ்சம் புகுவோமயின், இந்திரசாலம் போல் ஒருநொடியில் இத்துணை அல்லலும் தீர்ந்து பண்டை வண்ணத்தராகி விளங்குவோம் மற்றெல்லாந் தொழுதுண்டு பின்செல்வதாகும்; வேறெப்பணிக்கும் பழுதுண்டு; ஆதலின் உழுதுண்டு வாழ்தலே வாழ்வு. பிழைக்கும் வழியென்று வேறெவ்விவகாரமும் வேண்டா. அறிவென்ற பெயரால் இக்காலம் புதிதுபுதிதாய்க் கண்டுபிடிக்கின்ற அழிவுக்கருவிகள் ஒன்றும் வேண்டா. அப்பொழுது 'இல்லையே' என்று ஏங்கியிருப்பாரை எங்குங் காணமாட்டோம். இன்னமுது சுரந்தளிக்க நிலமடந்தை யின்னமுங் காத்திருக்கின்றாள். "செல்லான் கிழவனிருப்பின் நிலம் புலந்து இல்லாளின் ஊடிவிடும்" என்றபடி இப்பொழுது தன்னைவிட்டுப் பரத்தைப்பணத்தைக் குலாவிப்பிரிந்தவர்மாட்டு வளப்பமுடைய வயல்கள்சிறிதுசினந்திருக்கலாம்.எனினும், பதந்தெரிந்து அவ்வூடலை உணர்த்திவிடலாமே. அது செய்யாமல், "இலமென்று அசைஇயிருப்பாரைக் காணின் நிலமென்னும் நல்லாள் நகுதல்" இயற்கையே. இந்நகை வெகுளியுமன்று; இளிவரப் புரிந்த நகையுமன்று. பிரிந்த நாயகனைத் தன்பால் மீண்டும் ஈர்த்துக்கொள்வதற்குப் போக்கும் புன்முறுவலே இந் நிலமென்னும் நல்லாள் இனிது நணி இழைக்கின்றாள்.

உழுதுண்டு வாழ்கின்ற வாழ்க்கையே உத்தமமான வாழ்க்கை என்பது மாத்திரமன்றி மற்றவைகளுக்கெல்லாம் பழுதுண்டு என்பதையும் மறத்தலாகாது. வர்த்தக வருவாயின்றி விளைவுப் பொருள்கள்மட்டும் நம் நாட்டிலுள்ள எல்லாருக்கும் போதுமோ, என்னுஞ் சங்கை சில பொருளாதாய நிபுணர்கள் விளைவிப்பதுண்டென்பதை யறிவோம். இப்பொருளாதாய நிபுணரென்னும் இனத்தினர் (The Economists) வேறொன்றும் வாழ்க்கைக் குரியவைகளை விளைத்தளிக்கும் வன்மையிலராயினும், வாய்க்கெளிய இச்சங்கைகளை வளர்த்துவைக்கவே கற்றவர். அவர் கூற்றினை ஒருபோதும் நம்பவேண்டா. முப்பழமொடு பாலன்னம் இடுவதேனும் முகங்கடுத்திடும் பணத்தைக் காட்டிலும், உப்பில்லாக் கூழாயினும் முகமலர்ந்தூட்டும் நிலமே தக்கது. எனினும், உப்பில்லாக் கூழே உழவுத்தொழில் ஊட்டவல்லது என்பது இதன் பொருளாதாமை வெளிப்படை.

இவ்வளவும் உண்மையென் றொவ்வினாலும், சிற்சிலர்தவிர எண்ணிறந்தோர்க்கு நிலம் இல்லையாதலின் அவர்தாம் என் செய்வார் என்ற கேள்வி எழுதல் வேண்டும். இக்கேள்வியைத் தூண்டுவதற்கு வேண்டிய மதிநுட்பம் அதற்கேற்ற விடையை நாடுவதற்கு வேண்டியதில்லை. இயலாமைக் காதாரமாகிய கேள்விகளைக் கேட்கின்ற கருவி மனிதர் மதி. அதற்கு மதியைக் கொண்டே விடைசூழப் புகுவதெல்லாம் வழியில்லாக் கானகத்தே விழியில்லாதான் சுழல்வதை யொக்கும். இயலாதென்றிருப்பதையும் இயற்றிச் செலுத்தும் விடைகளை நல்கவல்லது இயல்தெரி மாந்தர் இதயங்களே. வாசாகைங்கரியங்களின் வளமிகுந்த இக்காலத்தில் பொதுஜனங்களின் தொகையைக்காட்டிலும் பொதுஜன உபகாரிகளின் தொகை அதிகம். சனங்களுக்கு ஓட்டுரிமை வாங்கித்தருவார், பண்டைய பழக்கவழக்கக் கொடுமைகளினின்று விடுதலை வாங்கித்தருவார், சுதந்தரங்கள் வாங்கித்தருவார், முதலாளிகளுக்குந் தொழிலாளிகளுக்கும் தீராப் பகை வாங்கித்தருவார், உத்தியோகங்கள் வாங்கித்தருவார், இத்தனைக்குந் தங்கள் உடல் பொருள் ஆவிகளைத் தியாகஞ் செய்வதற்குத் தாழமாட்டார். இத்தகைய உபகாரிகளில் செல்வந்தர்களும் உளர், அஃதில்லாதாரும் உளர். பின்னவர்களைப்பற்றிப் பேச்சில்லை. இம்முன்னையோர், வேலையின்றியும். வருவாயின்றியும் கருதரிய இடர்ப்பட்டு வறுமையால் வருந்துகின்றவர்களுக்கு அவரவர் குடும்பத்தின் அளவிற்கேற்றபடி நிலமும் உழவுக்கருவிகளும் கொடுத்து, "இதனைக்கொண்டு நீ அமைதியுடன் வாழ்க" என விடுக்கலாமே. இப்படிச் செய்வதற்கு ஈகின்ற இதயம் வேண்டும். அது இல்லாவிடத்து, மதியினளவில் 'தியாகம்' செய்யக்கூடியவைகளையெல்லாம் வாயால் வழங்கிவிடுவதால் ஏது பயன். நேற்றையதினம் நாம் ஒருவரோடு பேசிக்கொண்டிருந்தோம். வருந்தாது வாழ்வதற்கு வேண்டிய செல்வமுடையவர் அவர். மற்றவர்க்காகத்தான் பெரிதும் பாடுபடுகின்றாரென்னுமெண்ணம் அவருக்கும் அவரைச் சூழ்ந்திருப்பவர்களுக்கும் உள்ளது. பாடுபட்டு என்னசெய்து முடிக்கின்றார் என்பதைப் பார்க்கப்போனால், கதர் உடுத்தி வர்த்தமானப் பத்திரிகைகளைப் படித்து, "அயலரசாட்சி யொழியும் வரையில் இந்தியர்வறுமை தீராது" என்று வாய்க்குவாய் சொல்லிக்கொண்டிருக்கும் பேருதவி தவிர வேறொன்றும் எஞ்சாது. தன்னைப்போல் எல்லாரும் 'தியாகம்' செய்வார்களானால் இந்தியா நாளைக்கே நற்கதி யடைந்துவிடும் எனும் நிச்சயமான நம்பிக்கையும் உடையவர். அவர் பேசிக்கொண்டு வருகையில் தன் தியாகத்தின் வேகம் தலைக்கொள்ள "நானிறந்தபின் என்னுடலை வீணே சுட்டுவிடுவார்களே, என வருந்துகின்றேன். புலியேனும் ஒன்றென்னைக் கொன்று தின்னுமாயின் என்னுடலும் பயன்பட்டதாகும்" என மிகவும் உருக்கமாய்க் கூறினார். சிறிதுநேரமாயதும் யாமிருவரும் வெளியிற்செல்லும் நெறியில் ஓர் பிச்சைக்காரன் வந்து இரந்தனன். அவனுக்கு ஒரு காலணா கொடுக்கவேண்டும் என்னும் எண்ணம் அவருக்கு எழவேயில்லை. அவனைக் கடிந்து அகற்றவும் அகற்றினார். பின்னொருநாள் தன்னைத் தின்ன இருக்கும் புலியை நினைக்குங்கால் இப்பிச்சைக்காரனுக்கு இன்று காலணா கொடுக்கவேண்டுமென்பது ஒருகாரியமன்றுபோலும். உபகாரவார்த்தைகள் உலோபச் செயல்களாய் முடியும்படி இடையே மனம் நின்று செய்யும் மோசம் இத்தகையது.

இவ்வகையாய கருத்துக்களை உட்கொண்டு இயன்றவரையில் யாவரும் பணப்பசை நசிக்கும்படி உழவிற்கு எழுந்து சென்று மற்றவரையும் செல்விக்க முயல்வாரெனின் பொதுசன உதவி பெரிது விரைவில் நடைபெறத் தலைப்பட்டதாகும்.

# சிதம்பரதேவர் சரிதம்.

[904-வது பக்கத் தொடர்ச்சி]

## 21. பட்டாபிஷேகம்

சோமபாலன்—தம்பி, இரகஸ்யமாய் ஏதோ பேச வேண்டுமென்று தூதனுப்பினையே அஃதென்ன?

கோமளா—: அண்ணா! நான் சிதம்பரனைக் கொன்றதினால் இரவிவர்மன் மகிழ்வுடன் குலசேகரனையும் விக்ரமசேனனையுங் கொன்றொழியச் சத்துரு பயமுற்றிலுமொழியுமெதென விடைதந்ததும் பார்த்தீரோ? இப்பாலவனத்தை ஆளுவதற்கு என்ன அக்ரமஞ் செய்தாலுஞ்சரி, சத்துருவின்றி நீடூழிவாழ, நம்மிருவரையும் அவன் ஆயுதங்களாய் நியமித்து நமது ஏவலால் யாவும் நடந்து வருவதாய்க் காண்பித்து அதிக சினேகம் நடித்து நம்முடன் நயந்துகொண்டிருக்குமிவனுடையயுக்தியல்லவோ மெச்சத்தக்கது? எல்லா ஊழியமுஞ் செய்து நமது சுற்றத்தாரையுங் கொன்று வேலைக்காரைப்போல் நாம் எத்தனை காலமிருப்பது என்னும் மனோவியாதியால் மேலினி என் செய்வதென யோசிப்பதற்காகவே தூதனுப்பினேன்.

சோம:— நீ யுரைப்பதொன்றும் விளங்கவில்லை. நமது யுக்திப்படி யாவும் நடப்பித்துச் சேனாதிபதியாகவும் முதன்மந்திரியாகவும் நியமித்து நம்மில் நம்பிக்கை வைத்திருக்கும் இரவிவர்மன் பின் ஏதோ வஞ்சனை நினைத்திருப்பவன்போல் எண்ணுகிறாயே? நமது பிதாவின் கோரிக்கையை நிறைவேற்றி அவனை நாமகார்த்தம் வைத்துக்கொண்டு நாமே இராஜ்யமாளுகிறோம். மாளவ அரசன் விஜயன் தூண்டுதலால் அரசனையும் மந்திரியையும் சிறைமீட்க வருவதை உணர்ந்து அவ்விருவரையுங் கொலைசெய்ய உத்திரவளித்தோம். அவன் இனித் திரும்பிவிடுவான். சிதம்பரனும் இறந்தான். இவ்வாறு நமதிஷ்டப்படி யாவுஞ் செய்திருக்க இரவிவர்மன் என்ன வஞ்சனை நினைத்திருக்கிறான்?

கோ:—ஆஹா நன்றாயிருக்கின்றது. ஒருவனுக்கு ஊழியஞ்செய்து பிழைப்பதுதானோ நமது தொழில்? சேனைகள் நமது வசமல்லவா? சத்துருக்களாகிய நம் சுற்றத்தாரைக்கொன்று ஆள்பவன் நாமும் சத்துருக்களே என்று யாரேனுமுரைக்கின் நம்மையுங் கொலைசெய்ய முயல்வது இவனுக்குப் பெரிதோ? இவன் நம்மை மோசஞ்செய்யுமுன் இவனை நாமே ஒழித்து நான் பாலவனத்திற்கும் நீ அழகாபுரத்திற்கும் இராஜர்களாய் வாழலாகாதா?

சோமபா:—(சற்றுயோசித்து) உன் யுக்தியே சரி. பாலவனத்தை யாள இரவிவர்மன் வெகுகாலமாய் ஆசைவைத்திருக்கிறான். குலசேகரனுக்கு வரைந்தனுப்பிய ஓலையில் இராஜ்யத்தை நமக்குத் தருவதாகவல்லவோ எழுதவைத்தான். இப்போது அதை மட்டும் மறந்தவன்போற் காண்கிறான். அப்படியே சமயம் வாய்த்தாற் செய்துவிடுவோம். (கடைவாயிலில் ஓர் மணி "கணர் கணர்" என்றடிக்கத்) "தம்பி! இராஜன் அவசரமாய் நம்மைபழைக்கிறான், போவோம் வா" என்று இருவரும் இராஜசமுகம் சென்றனர். அரசன் அவர்களை எதிர்கொண்டழைத்துச் சிம்மாசனத்தருகிலமர்த்தி, "இச்சேவகன் கூற்றைக் கேளுங்கள்" என்று மிகப் பதைபதைப்பாய்க் கூறினான்.

சேவகன் நடுக்கத்துடன், "இராஜ ராஜர்களே' நமது மஹாப்பிரபு சோமபாலர் உத்திரவின்படி பதின்மர் சேவகர்கள் சூழ அரசனையும் மந்திரியையும் விலங்கிட்டு விதிவீதியா யழைத்துச் சென்று சூர்யோதயத்தில் இவர் கொலைசெய்யப்படுவரென்று பறையறைவித்தேன். பிரஜைகள் வருந்திப் பிரலாபித்தனர். படுகளத்தில் இருவரையும் ஏககாலத்தில் என் சைகை பார்த்து வெட்டிவிடத் திட்டஞ்செய்து காவலர்களை இருபுறத்தும் ஆயுதமேந்தி நிற்கச்செய்தபோது கொலையாளிகள் அவ்விருவர்களையுங் கொலைசெய்ய மறுத்தனர். அவர்களுக்கு நமது பிரபுவின் ஆக்கினையைக் காட்டிப் பயமுறுத்தினேன். அத்தருணம் இரு இளம்பிராயமுடைய யுத்தவீரர்கள் புரவிகளை யாரோகணித்து உருவினவாளுடன் அட்டகாசஞ்செய்துகொண்டு அதிவேகமாக வரக்கண்டு வெட்டிவிடும்படி சைகை செய்தேன். இதற்குள் அவர்கள் நெருங்கிக் கொலையாளிகளை வெட்டி வீழ்த்திப் பின் காவலர்களையெதிர்த்து மடித்து அரசனையும் மந்திரியையும்தங்கள் புரவிகளிலேற்றி உத்திரதிசை நோக்கிச் சென்றனர். அவர்கள் போனவழியைக் கவனித்து வந்தேன். என்னுடன் ஐம்பது போர்ச் சேவகர்களை யனுப்பின் அவர்களை வதைத்து வருகிறேன்'' என்றான். கோமளாங்கன் கடுஞ்சினங்கொண்டு, நீ "புறங்காட்டி ஓடிப் பிழைத்து இங்கு வந்தனையோ? என்று வாளையுருவச் சோமபாலன் குறுக்கிட்டு, "தம்பீ, இவனைக் கொன்றால் அவ்விரு வாலிபர்களும் கிழப்பிணங்களிருவரும் கொலைபடுவார்களா? அவர்களைத் தேடிப்பிடிப்பதற்கு இவன் வேண்டாவோ?'' என, கோமளாங்கன் சினந்தணிந்து அவ்வாலிபர் பரமார்த்தகேஸரியும் புஜங்ககேஸரியுமோவென ஐயுறவுற்றுச் சேவகத்தலைவனை அவர்கள் உறுப்படையாளங்களைக் கேட்க, அவன் விடையால் சிதம்பரனும் புகழேந்தியுமாயிருப்பரோ - சிதம்பரன் இறந்தானே என்று பலவாறு யோசித்துச் சபையைவிட்டு அச்சேவகத்தலைவனுடன் 50 போர்ச் சேவகர்களை அழைத்துக்கொண்டு ஆயுதமெடுத்து வெளிப்பட்டான்.

சிதம்பரனும் புகழேந்தியும் தங்கள் பிதாக்களை ஓர் வனத்திற்கு அழைத்துச் சென்று களைதீர்த்து ஒருவர்க்கொருவர் தெரியச்செய்து பிதாக்கள் தங்களை ஆலிங்கனம் செய்து ஆனந்தமுற்றிருக்கையில் கோமளாங்கனும் சேவகர்களும் வரும் ஆரவாரங்கேட்டுஓர் மரமேறி அவன் யுத்தகோலத்துடன் வருவது கண்டு பிதாக்களிடம்விடைபெற்றுச்சென்று யோகீஸ்வரரைத்தியானித்துக்கொண்டு சத்துருக்களை எதிர்த்தனர். அவர்களிவர்களைப்பிடிக்க எத்தனிக்கவும் சேவகர்களைத்தலைமாடு கால்மாடாய் வெட்டியெறியக் கோமளாங்கனும் நான்கு சேவகர்களும் மீந்தனர். அவன் வாட்போர் புரியமாட்டாது துப்பாக்கியை யெடுக்கவே சிதம்பரன் பயந்து கோமளாங்கனது சிரசு தரையில் வீழ வாளால் வீசினான். புகழேந்தி மீந்த சேவகர்களை விடாமல் மடித்தனன். ஒருவன் தப்பித்துப் புறங்காட்டியோட அவனைத்தொடராமல் பிதாக்களிடஞ் சென்று நடந்ததைக்கூறி ஆனந்திக்கச்செய்து பகலையவ்விடத்திற்போக்கி இரவில் விக்ரமசேனன் வழி

காட்ட ஓர் கிராமத்திற்சென்று அதன் தலைவனுக்குத் தெரிவிக்க அவன் மகிழ்ந்து அவர்களை ஓர் இரகஸ்ய விடத்தி லமரச்செய்து உணவளித்து ஆயாசந்தீர்த்து உபசாரணை செய்துகொண்டிருக்கையில் பாலைவனத்தைச்சுற்றி முற்றுகை போட்டிருக்கும் ஓர் சைன்ய அரவம் கேட்க அதை விக்ரமசேனனுக்குத் தெரிவித்தான். விக்ரமசேனன் மாறுவேடந்தரித்து வெளிப்பட்டுச் சைன்யத்தை நெருங்கச் சேனைத்தலைவரி லொருவன் இவனைப்பிடித்துத் தனதரசனிடங் கொண்டு சென்று, "இவன் யாரோ சத்துருவைப்போற் காண்கிறான். சயரூபத்தை மறைத்து வேஷமிட்டிருக்கிறான். சந்தேகித்துப் பிடித்துவந்தேன்" என்றான். பரமார்த்த கேஸரி உற்று நோக்கிச் சேவகத்தலைவனை யகலவிடுத்து விக்ரமசேனன் பாதத்தில் நமஸ்கரித்து ஆசனத்திருத்தி எதிரில் நிற்க விகரமசேனன் களித்துப் பரமார்த்தகேஸரியை ஆலிங்கனஞ்செய்து ஒரு கணப்பொழுதில் தனது விர்த்தாந்தத்தை எல்லாம் எடுத்துரைத்துச் சக்ரவர்த்தியும் குமாரனு மிருக்குமிடம் உரைக்க மஹாதேவர் விஜயன் விக்ரமகேது புஜங்கன் முதலியவருடன் சென்று சக்ரவர்த்தியை வணங்கித் துதித்தனன். அவரும் தன் மருமக்களை வாரியெடுத்து ஆலிங்கனம்செய்து ஆனந்தக்கண்ணீர் சொரியத் தனது ஆபத்துக் காலத்தில் உதவிசெய்ய யாவரையு மொன்றுசேர்த்த கடவுளைப் பலவாறு புகழ்ந்து பாக்களாற் றுதித்துக் களிப்புற்றான். பிறகு யாவருஞ் சென்று சேனையுடன் கலந்தனர். அரசன் மனைவிகளும் விக்ரமசேனன் மனைவிகளும் தங்கள் நாயகன்மாரை வலம்வந்து வணங்கி அவர்களடைந்த துன்பத்திற்குப் பலவாறு பிரலாபித்து வருந்தி இரக்ஷித்தருளிய கடவுளைப் போற்றினர். மக்களைக் காண மனங் குளிர்ந்து அன்பு வளரவள்ர மிகுந்த ஆனந்தங் கொண்டு யாவரும் சந்தோஷக்கடலில் முழுகினவர்களாய்ச் சூர்யோதயத்தை எதிர்பார்த்திருந்தனர்.

தோலாமொழித்தேவர் இயற்றிய

# சூளாமணி

[912-வது பக்கத் தொடர்ச்சி]

## 6. தூதுவிடு சருக்கம்.

461

புலவி தானுமோர் கலவியை விளைப்பதோர் புலவி
கலவி தானுமோர் புலவியை விளைப்பதோர் கலவி
குலவு வார்சிலை மதனனைங் கணையொடு குலவி
இலவு வாயுடை யிளையவ ருடையன இவையே. 31

புலவிதானும் ஓர் கலவியை விளைப்பது ஓர் புலவி-இவர்கள் ஊடும் ஊடலும் பின்பு கூடுதலாகிய இன்பத்தை விளைப்பதோர் ஊடலே. கலவிதானும் ஓர் புலவியை விளைப்பது ஓர் கலவி-இவர் அளிக்கும் கலவியின்பமும் அதற்குக் காரணமான ஊடலைமேலும்விளைவிக்கும் ஒருகலவியே; இவையே-ஆகிய இப்புலவிகலவிகளையே, குலவு' வார்சிலை மதனன் ஐங்கணைஓடு குலவி-இனிய ரசம்மிகுந்த நீண்ட கரும்புவில்லையுடைய மன்மதனுடைய பஞ்சபாணங்களோடு பொருந்திய அழகுடன் விளங்கி, இலவு வாய் உடை - இலவமலரையொத்த செவ்வாயை உடைய, இளையவர் உடையன - மடமங்கையராகிய இவர்கள் உடையனவாம்.

முதலிரண்டு அடிகளின் கருத்தை,

> ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்
> கூடி முயங்கப் பெறின். (1330)

என்ற திருக்குறளால் தேர்க. அவர்களை மதனனைங் கணையொடு குலவி என்றது, அவர்களுடைய மேனி மா அசோகு இவற்றின் தளிர்களையும், கண் நீலோற்பலத்தையும், பல் முல்லையையும், முகம் தாமரையையும் ஒத்து விளங்குதலைக் குறித்து.

462

மன்னு வார்சிலை மதனனோர் வடிவுகொண் டிலாதான்
தன்னை நாமுமோர் தகைமையிற் றணத்துமென் [றிருப்பார்
என்னை பாவமிங் கிவர்களைப் படைத்தன னிதுவால்
பின்னை யாங்கவன் பிறவிக்கு முதல்கண்ட வகையே.

மன்னு வார்சிலை மதனன் ஓர் வடிவு கொண்டு இல்லாதான்-நிலைபெற்ற நீண்ட கரும்புவில்லையுடைய மன்மதன் உருவிலியாய் (அனங்கனாய்) இருக்கின்றான். (ஆதலால்,) தன்னை - அவனை, நாமும் ஒரு தகைமையில் தணத்தும் என்று இருப்பார் - நாமும் ஒருவகையாக அகற்றிவிட்டு இருப்போம் என்று எண்ணி (உலகத்தில் ஆடவர் காமஇச்சையின்றி ஒருகால்) இருந்துவிடுவார்கள். என்னை பாவம் - அஃது என்ன தீங்காய் முடியும்? (என்று நினைத்து) இங்கு இவர்களை படைத்தனன் - பிரமன் இங்கே இவர்களைப் படைத்தான். இதுவே ஆங்கு அவன் பின்னை 'பிறவிக்கு முதல் கண்டவகை - இதுதான் அப்பிரமதேவன் பின்பு உலகத்தில் மனிதர்கள் பிறப்பதற்கு மூலகாரணமாகிய பொருளை உண்டாக்கிய நெறியாம்.

மன்மதனே, தான் அரூபியாதலால் தன்னைத்தணத்துமென்று இருப்பார் என நினைத்து இழந்த சரீரத்தை மீண்டும்பெற்றுப் பிறப்பதற்காக, இவர்களைத்தனக்குப் படைத்துணையாகப் படைத்துக் கொண்டான், என்று உரைப்பினும் அமையும்.

463

வாம மேகலை முதனின்று வயிற்றிடை வளர்ந்த
சாம லேகைகள் மயிர்நிரை யலதல மீது
காம நீரெரி யகத்தது கனன்றெழ நிமிர்ந்த
தூம லேகைகள் பொடித்தன துணைமுலை யுறவே. 33

வாமம் மேகலை முதல் நின்று வயிற்று இடை வளர்ந்த சாமம் லேகைகள் மயிர் நிரை அல - அழகிய மேகலாபரணம் அணிந்த அரையிலிருந்து வயிற்றின் மேல் வளர்ந்துள்ள கரிய கோடுகள் மயிரொழுங்கு அல்ல; அகத்து காமநீர் எரிதலம் மீது கனன்று எழு துணைமுலை உற பொடித்தன தூமம் லேகைகள் - உள்ளே உள்ள காமத்தன்மையாகிய தீ கனிந்து எழுந்து முலையிணையைச் சாரும்படி மேலோங்கிப் படர்ந்த புகைக்கொடிகளே யாம்.

சாமம் - கருநிறம், லேகை - ரேகை, கோடு, வரி. நீர் - தன்மை குணம்.

464

சனங்க டாஞ்சில தவங்களைத் தாங்குது மெனப்போய்
வனங்கள் காப்பவ ருளரென முனிவமற் றன்றேல்
தனங்க டாந்தவழ் சந்தனக் குழம்பிடை வளர்ந்த
கனங்கொள் வெம்முகங் கறுப்பதென் காரண

[முரையீர். 34.

தனங்கள்தாம் தவழ் சந்தனம் குழம்பு இடை வளர்ந்த கனம்கொள் வெம் முகம் கறுப்பது - முலைகள் நிரம்பப்பூசிய சந்தனக்குழம்பினிடையிலே வளர்ந்து பருத்து விரும்பப்படும் முகங்கள் கருத்து இருப்பது, சனங்கள்தாம்-மனிதர்கள், சில தவங்களை தாங்குதும் என - சில தவங்களை மேற்கொண்டு ஆற்றுவாம் என்று கருதி, போய் வனங்கள் காப்பவர் உளர் என முனிவ - சென்று காட்டிடைத் தம்மைப் பாது காத்துக்கொண்டு இருப்பவரும் உளரென்னக் குறித்து முனிந்ததின் குறியாகும். அன்றேல் - அஃது அன்றேல், மற்று என் காரணம் - அதற்கு வேறுகாரணம் என்ன? உரையீர் - அறிந்துள்ளீராயின் சொல்லுங்கள்.

வெம்மை - விருப்பம். முலைமுகம். கறுத்தல்-முலைக்கண் கருத்திருத்தல்; முகங்கறுத்தல் சினக்குறிப்பு.

465

தூம மென்புகை துழாவிவண் டிடையிடை துவைக்
தாம வோதியர் தம்முகத் தனபிறர் மனத்த [கும்
காம னீள்சிலை கணையொடு குனிவகண் டாலும்
யாமெ மின்னுயிர் உடையமென் றிருப்பதிங்கெவனோ

தூமம் மென்புகை துழாவி - அகிலின் மென்புகை அளைந்து, வண்டு இடை இடை துவைக்கும் தாம ஓதியர் தம்-வண்டுகள் இடையிடையே மிதித்து நசுக்கும் மலர்மாலையை அணிந்த கூந்தலாராகிய அம்மங்கையரின், முகத்தன - முகத்தினிடத்தனவாகிய புருவங்கள், பிறர் மனத்த காமன் நீள் கணை சிலை ஒடு குனிவ - ஆடவர் மனத்திலே சென்று தைக்கும் மன்மதனுடைய மலரம்புகளோடு கூடிய கரும்பு வில்லுடன் வளைபவற்றை, கண்டாலும் - பார்த்தபோதும், யாம் - நாம், இன் உயிர் உடையம் என்று இருப்பது இங்கு எவனோ-இனிய உயிரை உடையவராய் இருப்போம் என்று சொல்லிக்கொண்டு இருப்பது இவ்வுலகத்தில் எவ்வாறு கூடும்?

'உடையம்' என்பதை 'உடையாம்' என்பதின் விகாரமாகக்கொண்டு 'உடையாம் என்று இருப்பது' என்பதற்கு உடையேம் (உடைந்து போகேம்) என்று இருப்பது என்றும் உரைக்கலாம்.

466

என்று மைந்தர்க ளிடருற வெழுதிய கொடிபோல்
சென்று கற்பக வனமன செறிபொழி லடைந்தார்
இன்று காமுகர் படையினை இடர்பட நடந்த
வென்றி காமனுக் குரைத்துமென் றிரைத்தளி

[விரைந்த. 36.

என்று - இவ்வாறு சொல்லி, மைந்தர்கள் இடர் உற-மைந்தர்கள் துன்புற்று வருந்த, எழுதிய கொடிபோல் சென்று கற்பகம் வனம் அன்ன செறி பொழில் அடைந்தார் - ஓவியர் எழுதிய பூங்கொடிபோலச் சென்று அம்மாதர்கள் நால்வரும் கற்பகவனத்தை யொத்த பலமரங்கள் செறிந்த அந்தப் பொழிலினைச் சேர்ந்தார்கள். இன்று-இன்றைத்தினத்தில், காமுகர் படை இனை இடர்பட நடந்த வென்றி-காமுகர்களான ஆடவர்கூட்டம் வருந்துந் துன்பத்தை அடையுமாறு அம்மங்கையர் நடந்து சென்று பெற்ற வெற்றியை, காமனுக்கு உரைத்தும் என்று-மன்மதனுக்குச் சொல்லுவாம் என்று, அளி இரைத்து விரைந்த - வண்டுகள் ஒலித்துக்கொண்டு வேகமாய்ப் பறந்தோடின.

எழுதிய கொடி - வெற்றி எழுதிய பதாகை என்றுமாம். இனைதல் - வருந்துதல்.

(வேறு)

467 [யைதன்

ஆடைகைத் தலத்தொருத்தி கொண்டதங் கடைப்
மாடுகைத் தலத்தொருத் திகொண்டது மணிக்கலம்
சேடிகைத் தலத்தன செறிமணித் திகழ்வசெம்
கோடிகைத் தலத்தன குளிர்மணிப் பிணையலே. 37.

ஒருத்தி கைத்தலத்து கொண்டது ஆடை - சேடியொருத்தி கையில் ஏந்திவந்தது உடுக்கும் உடைகள்; தன்மாடு ஒருத்தி கைத்தலத்து கொண்டது அடைப்பை-அவள் பக்கத்தில் வேறொருத்தி கையில் தாங்கிவந்தது வெற்றிலைப்பை; சேடி கைத்தலத்தன மணி கலம் - வேறொரு சேடி கையில் கொணர்ந்தன ரத்நாபரணங்கள்; மணி திகழ்வ செங் கோடிகைத் தலத்தன குளிர்மணி பிணையலே - மணிகளால் விளங்கிய அழகிய பூந்தட்டிலே வைத்து ஒருத்தி ஏந்தியன குளிர்ந்த அழகிய பூமாலைகளே.

அடைப்பை - வெற்றிலைபாக்கு முதலியவைகளை வைக்கும் பை. அடை - இலை, வெற்றிலை கோடிகை - கோடிகம், பூந்தட்டு.

(வேறு)

468 [வளர்பூங்

வண்ணச் சந்தங்க ணிறைந்தன மணிச்செப்பு
கண்ணிச் சந்தங்க ணிறைந்தன கரண்டகம் கமழ்பூஞ்
சுண்ணச் சந்தங்க ணிறைந்தன சுடர்மணிப் பரப்போ
டெண்ணச் சந்தங்கள் படச்சுமந் திளையவரிசைந்தார்.

வண்ணம் சந்தங்கள் நிறைந்தன மணி செப்போடு-பலவித சந்தனக் கலவைகள் நிறைந்த இரத்தினக் கிண்ணிகளுடனும், சந்தம் வளர் பூ கண்ணிகள் நிறைந்தனகரண்டகத்தோடு - அழகு நிரம்பிய மலர்க்கண்ணிகள்நிறைந்த பூக்குடலைகளோடும், கமழ் சந்தம் பூ சுண்ணங்கள் நிறைந்த பரப்போடு-ஒளிபொருந்திய மணிச் செப்புக்களோடும், எண் அ சந்தங்கள்பட சுமந்து - ஒன்று சேர்த்து எண்ணப்படும் பலவகை அலங்காரப் பொருள்களையும் விளங்கச் சுமந்து, இளையவர் இசைந்தார் - இள மங்கையர் உடன்வந்தார்கள்.

பரப்பு - பரந்த, அகன்ற செப்பு (ஆகுபெயர்). சந்தங்கள் - அழகைச்செய்யும் பொருள்கள் (ஆகுபெயர்). 'பிரப்பு' என்ற பாடம் பொருட்பேறிலது.

469

தகளி வெஞ்சுட ரெனத்திகழ மணகுழை தயங்க
மகளிர் மங்கல வுழைக்கலஞ் சுமந்தவர் பிறரோ
டுகளும் மான்பிணை யனையவ ருழைச்செல ஒளிர்தாத்
துகளில்விஞ்சையன் றுணிந்தனன் றுறக்கமீதெனவே.

தகளி வெம் சுடர்என திகழ் மணி குழை தயங்க-அகலிலேற்றியபிரகாசமான விளக்கைப்போல ஒளிரும் மாணிக்கக்குழைவிளங்க,மங்கலம் உழைக்கலம்சுமந்தவர் மகளிர் பிறரோடு-எண்வகை மங்கலப் பொருள்களைத் தாங்கியவராகிய வேறு பல மகளிரோடு, உகளும்

மான் பிணை அனையவர் - துள்ளி விளையாடும் பெண் மானையொத்த மங்கையர் முற்கூறியவர், உழைசெல - பக்கத்திலே வர(க்கண்டு), ஒளிர்தார் துகள் இல் விஞ்சையன் துறக்கம் இது எனவே துணிந்தனன்-விளங்கும் மாலையை அணிந்த குற்றமற்ற வித்தைகளில் வல்லவனாகிய அந்த வித்தியாதரனாகிய மருசி, அது சொர்க்கலோக மென்றே நிச்சயித்தான்.

470

துறக்கம் புக்கவர் பெறுவன விவையெனத் துணியா
வெறிக் கள் விம்மிய விரைவிரி தாரவ னிருப்பச்
சிறைக்க ணோக்கமுஞ் சிறுநகைத் தொழில்களுஞ் [சுருக்கி
அறைக்கண் மாந்தனுக் கதிதியந் தொழிலினி [லமைந்தார். 40.

வெறி கண் விம்மிய விரைவிரி தாரவன்-கள்நிறைந்த வாசனைமிக்க மலர்மாலையை அணிந்தவனாகிய மருசி, துறக்கம் புக்கவர் பெறுவன இவை என துணியா இருப்ப-சொர்க்கலோகத்தி லுற்றவர் பெற்று அனுபவிக்கும் இன்பங்கள் இவையென்று துணிந்து (விம்மிதமுற்று) இருப்ப, (அவர்) சிறைக்கண் நோக்கமும் சிறுநகை தொழிலும் சுருக்கி - அம்மங்கையர் தமது கடைக்கண் பார்வையும் புன்னகையுமாகிய தொழில்களைக் குறைத்துக்கொண்டு, அறைக்கண் - (அங்கே அமைக்கப்பட்டதோர்) அறைக்குள் புகுந்து, மாந்தனுக்கு அதிதி தொழிலினில் அமைந்தார்-அவனுக்கு விருந்திட்டு உபசரிக்கும் தொழிலில் பொருந்தினர்.

வெறி - கள், தேன். சிறைக்கண் நோக்கம்-கடைக்கண்பார்வை. இது 'சிறக்கணித்தல்' என்றும் வழங்கும். (திருக்குறள் 1095) - அங்கே பரிமேலழகர் அதைச் 'சிறங்கணித்தல்' என்பதின் விகாரமெனக் கொண்டு 'சுருங்குதல்' என்று பொருள் கூறியுள்ளார்.

அறை - கற்பாறை என்றுமாம். மாந்தன் - இது 'மாந்தர்' எனப் பன்மையில் வருவதன்றி இவ்வாறு ஒருமைச் சொல்லாக வருவது அருகிய வழக்கு.

# தமிழிரட்டையர்

## தோற்றுவாய்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று" என்றசெந்நாப்போதரார் சீர்தூக்கிச்செப்பியுள்ளார். உலக செல்வங்களையடைவதில் அல்லும்பகலு மிடையறாதுழன்று இறைவனருளைச் சிந்தித்திடுவதில் சிறிதும் பொழுதுபோக்க மனமிலாகி எண்ணிறந்தோர் பெரும்பொருளும்அப்பொருளினால் அரசியல்மந்திரி,அரசப்பிரதிநிதியினவை நிறைவேற்றக்கூட்ட உறுப்பினர், திவான் பகதூர், இராய் பகதூர் போன்ற பட்டங்களென்னும் புகழையுமடைவதே குறிக்கோளாகக் கொண்டு நடப்பது யாவருமறிந்ததே. அத்தகையவர் வள்ளுவர் குறளுக்கு எத்தகைய பொருள் கண்டுள்ளார்களென அவர்வாழ்க்கையினின்றும் எளிதில் அறியலாமன்றோ. அன்னவர்கொண்ட பொருள் என்று பிரித்துக் கூறினமையால் மற்றவர்க்கு ஏற்ற பொருள் என்பது வேறொன் றுண்டன்றோ? அஃதென்னவெனில், முற்கூறியவர்கள் திரண்ட செல்வமுடையராயினும் அச்செல்வம் அவர்களைவிட்டு எப்பொழுது செல்வோம் என ஏங்கி இடம்கிடைத்தால் மறையுமியல்பினதாதலாலும், அத்தகைய செல்வத்தை அடிப்படையாய்க் கொண்ட புகழும் அதனுடனே மறைந்துபோவது இயற்கையாதலாலும் அது நாயனார் கூறும் புகழாகாது. குறளிலுள்ள சொற்களை உற்றுநோக்கின் "தோன்றும் புகழானது என்றும் தானே நிலைத்து நிற்கத்தகுந்ததா யிருத்தல்வேண்டுமே ல்லாதுய தோன்றி மறையும் புகழ்தோன்றுதலேகூடாது என்பதுபுலப்படும். அப்படியாயின் நிலைத்த புகழை எவ்வாறடைவதெனும் வினா வெழும். அதற்குக் குலசேகராழ்வார், "நின்னையேதான்வேண்டி நீள்செல்வம் வேண்டாதான் தன்னையே தான் வேண்டும் செல்வம்போல்" என்று விற்றுவக்கோட்டம்மானைத் துதித்துள்ளார். என்ன புதுமை, என்ன வேற்றுமை! முன்னவர்கள் பொருளை நத்தி இறைவனது அருட்செயல்களைச் சிறிதும் சிந்திக்கவும் நேரமிலாகி உழன்றுதிரட்டும் வெறுக்கையும் அதனால் விளையும் புகழும் விழலுக்குவார்த்தநீராகி வேண்டியபலனை யளியாமல் போக, பின்னவர்களுக்கு, அதாவது மண் பொன் பெண் என்பவைகளைச் சிந்திக்கவும் செய்யாது அவற்றை வெறுத்து ஆண்டவனது அருள் ஒன்றையே நாடுகின்றவரை அச்செல்வம் வலியவலியச் சென்று பிரியேன் பிரியேன் எனச் சுற்றிக்கொள்ளுகின்றதாம். அவ்வாறே "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற உள்ளத்தினராய்ப் பின்னவர்கள் போன்று புகழைத் தாமே முயன்றுபெற விரும்பாது தமது கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றுகின்றோரை அப்புகழ் தானே வலியவலியச் சென்று பற்றிக்கொண்டு நிலைப்பதாகும். அஃது இப்பொழுது அழிந்துபடாது. அவ்விதப் புகழையே யடையவேண்டுமென நம் தமிழ்மறை கூறுகின்ற தெனத் தமியேன் கருதுகின்றேன். எடுத்துக்காட்டாக, மதாநுபங்கியார், உலகினர்கள் கைக்கொண்டொழுகி உய்யுமாறு இயன்றன செய்வது தம்கடமையெனஎண்ணித் திருக்குறளை வெளியிட்டார். அக்குறளே நாயனருக்கு மன்பதைப் பெரும்புலவர் (The bard of the universal man)என்றபுகழை யளிக்கின்றது. இப்படியே, ஆசிரியர் சேக்கிழார், அநபாய சோழன் சீவகசிந்தாமணியை மெய்யென மயங்கிக் கெட்டுப்போவானென அஞ்சி, அது மெய்யுடையதன்று என எடுத்தியம்புவது தமது கடமைஎனக்கொண்டு அதன் பொய்ம்மையை விளக்கிக்காட்ட, அச்சோழன், மெய்நூல் யாதெனக் கடாவுதலும் சேக்கிழார் அறுபான் மும்மை நாயன்மார்கள் வரலாறுகளைத் தொகுத்துரைத்தலும்,மன்னன் மகிழ்ச்சி மிகக்கூர்ந்து திருத்தொண்டர் புராணம் இயற்றித்தருதல் வேண்டுமென வேண்டிக்கொள்ளுதலும், சேக்கிழார் புராணம் பாடிமுடித்தலும் அதன்பயனால் உமாபதிசிவாசாரியார் "சங்கரன்தாள்தமது சிரங்கொள்திருத்தொண்டர் புராணத்தையளவிட நஞ்சேக்கிழார்க் கெளிதலது தேவர்க்குமரிதே"என்றும், கம்ப நாட்டாழ்வார்" "சான்றோர்கவியெனக்கிடந்த கோதாவரி" என்று எடுத்துக் கூறுவ

தும் திருச்சி மாபெரும் புலவரான காலஞ்சென்ற நம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் "எங்கள் கோமான் உயர்கல்விமாட்சியையுணர்ந்து செங்குருமணிச் சூட்டு மோட்டு நிரைகெழுவுதுத்திப் பணுகூவிப் பாம்பொன்று நேரடைய மன்றுள் நாணும்" என்று போற்றிப் புகழ்வதும் நிகழ்ந்தன. இன்னும் நம் தமிழ்நாட்டிலே மட்டுமன்றி உலகெங்கணும் புகழைத் தாமடைதலே கருதாது தம் கடமைகளை நிறைவேற்றும் பெரியோர்களை எக்காலத்தும் காணலாகும். அலெக்சாண்டர் போப் (Alexander Pope) என்ற மாபெரும் ஆங்கிலப் புலவர் புகழைப்படைவதுமட்டும் தமது வாழ்க்கையின்பயனுகாதெனக் கூறுவதுபோல் (Thus let-me live, unseen, unknown; Thus unlamented let me die, steal from the world, and not a stone tell where I lie) ஒருவராலும் பார்க்கப்படாமலும், தெரியப்படாமலும், ஒருவரும் தம்மைக்குறித்து வருந்தாமலும் தாம்இறந்துபோதல் வேண்டுமென்றும் உலகில் தமதுடல் அடக்கம் செய்யப்படும் குழியின்மேல் நாட்டப்படும் குறிப்புக்கல்லும் கூடாதென்றுங் கூறியுள்ளார்.

சின்னுட்களுக்குமுன், அவ்விதமாய் நடந்தேறிய வரலாறு ஒன்றின் சுருக்கம் 13-2-29-ல் வெளியான திராவிடன் பத்திரிகையினின்றும் எடுத்தெழுதுகிறேன்.

1929 ஆண்டு ஜனவரிமாதம் 15-ம் தேதியன்று டாக்டர் ஜேம்ஸ் ஸ்மித் என்பவரின் புதல்வர்களான சிட்டினி சிமித், பெரௌன் சிமித் என்பவர்கள் லண்டன் நகரிலுள்ள செண்ட்ஜேம்ஸ் தெருவில் தற்கொலை செய்துகொண்டார்கள். அவர்கள் இறந்த அறையில் "தேசத்தினர்களுக்கு" என்றவிலாசமிட்ட கடிதத்தில் "எங்கள் வேலைகளை முடியுங்கள்" எனவரைந்துவைத்திருந்தனர். இவர்கள் எடின்பரோ வைத்தியக்கல்லூரியில் நன்குதேறித் தொழிலியற்றுமாறு லண்டனுக்கு வந்தவர்கள். இவ்விருவரும் இரட்டைப்பிள்ளைகள். வயது 29. இருவரும் ஒருவரைப் பார்த்ததுபோலவே தோன்றினர்கள். எளிதில் பிரித்தறிய முடியாத விதத்தில் உயரம் தோற்றம் நடை உடை நிறம் குரல் முதலிய எல்லாவற்றிலும் ஒத்தேயிருப்பார்கள் இவ்விருவர்களுக்கிடையே மற்றுமொரு அதிசயம் விளங்கிற்று. ஒருவர் ஒருவாக்கியத்தை ஆரம்பித்துவிட்டால் அதேவாக்கியத்தை மற்றைய சகோதரர் முடித்துவிடுவார் (தமிழ் நாட்டில் முன்னர் அருந்தமிழ்ப் பாக்கள் பாடிய இரட்டைப்புலவர்கள் திறமை இவர்களிடமும் சிறப்புற்றிருந்த தென்னலாம். தமிழ் இரட்டையரைக் குறித்துக் கீழே கண்டுகொள்ளவும்) அதற்கு மனஒற்றுமையே காரணம். குரலில் ஒருபேதமு மின்மையால் வேறுபிரித்து அறியஇயலாததாயிற்று. எதை முன்னிட்டும் துக்கக்குறி என்பதை இவர்கள் முகங்களில் எப்பொழும் எவரும் கண்டதில்லை: இவர்கள் தம் வாணுளையும் உரிமைகளையும் உலகத்தினர்களுக்கே செலவழித்தார்கள். உடலில் உள்ளிருந்தே அரித்துக் கொண்டுசெல்லும் கான்ஸர் என்ற ஒருவித கொடிய நோயை முற்றிலும் நீக்கிவிடுவதற்குரிய வழிகளைக் கண்டுபிடிப்பதற்கே தம் பொருள்முழுமையும் செலவழித்து ரேடியம் என்ற விலையுயர்ந்த உலோகத்தால் ஆராய்ச்சிசெய்யத் தொடங்கி, முற்றிலும் வெற்றியடையா முன்னர்க் கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கினன் இலங்கைவேந்தனுகையால் இவர் சிறிது எஞ்சிய பொருளைக் கடன்காரர்களுக்குக் கொடுத்துத் தீர்த்துவிட்டு வறுமையின் கொடுமையால் பிறரறியா வண்ணம் தற்கொலை செய்துகொண்டார்கள். அந்தோ எவ்வளவு சுயநலமறுப்பு, எவ்வளவு இரக்கம். இவ்விருவரின் மரணத்தைக் குறித்து உலகமே துக்கிக்கின்றது. அவர் செயல்களைப் போற்றிப் புகழ்கின்றது. தம்கடமைஎனக்கருதி ஆராய்ச்சியில் தலைப்பட்டு வறுமையால் இடுக்கணுற்றபொழுதும் தம் செய்கைகளைப் பிறருக்குக் கூறின் அதுபுகழுக்காகத் தாம் பாடுபட்டதாய்ப் போகுமெனக்கருதி ஒருவருமறியாவகை உயிர் துறந்தார்கள். உலகம் தானே வலிந்து அவர்களுக்கு நிலைத்த புகழைத் தருகின்றதன்றோ? தமிழ் இரட்டையரும்நதியைப் பிறழவைத்துப் புகழ்படைக்க எண்ணினரல்லரேனும், தாமியற்றியநூல் முரண்பாடுடையதன்று என விளக்கிக்காட்டுவது இன்றியமையாமையாதல் சிவபெருமானைத் தோத்தரித்தலும், நதி பிறழ்ந்து வருதலும் நிகழப்பெற்று அதன்வழி, புகழ் தானே அவர்களைச் சென்று பற்றிக்கொண்டதுமாகும். அதையும் நோக்குவோம். (தொடரும்.)

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

குழந்தைகளுக்கு:

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,

"பால சுதா" (Reg.)

அமிர்தாமலகதைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்




டானிக்குகள்:

சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்

ஜீவவுசுதா (Reg.)

பிருங்காமலக தைலம்
ஸ்டேஷல் மருந்து 15 நாட்களுக்கு ரூ. 2-0-0.

டிப்போ: பம்பாய். கல்கத்தா.

நஞ்சன்கூடு பல்பொடி
சாதாரணம்-பாக்கேட்

பிராஞ்சு: மதுரை. காஞ்சீபுரம்

# நவராத்திரி

## [ஓர் நாடகம்]

[908-வது பக்கத் தொடர்ச்சி]

உரு :—ஏன்—என்ன திடுக்கென ; இப்படி—ஏற்றுகிறேன்.

காமா :—வியப்பென்ன-பெண்களுடன் முகத்திற்கு முகம் கூச்சமின்றி நின்று பேசுபவர்க்குப் பெண்படம் காண நாணமேன், நடுக்கமேன் ?

உரு :—படங்களோடு நாம் துய்க்கும் உரிமையும் இன்பமும் சதைப்பற்று உருக்களுடன் எக்காலும் முடியாததான்—(விளக்கேற்றிக் காமுவை நோக்கி அவள்முகத்தில் ஒளிவீசி நகைக்கிறான்)

துரை :—வா—இங்கே (மூவரும் தாழ்வாரத்தின்இடப் புறம் அடைந்து) காட்டு.

காமா :—விளக்கை நான் பிடித்துக்கொள்கிறேன்-என்ன புத்தகம் ?

உரு :—சரி—இதுதான் (பொன்னியின் புகைப்படத்தைத் துரைசிங்கன் கையில் கொடுக்க)

துரை :—சரி—காரியம் கெலிக்கும்...

காமா :—இதனை மந்திரிக்கப் போகிறீர்களா-

துரை :—இம்முகச்சாயல்வேறெங்குப் பார்த்துளீர்?

காமா :—தியாகுதான்......

உரு :—ஆம் இருக்கிறது—அதனால்தான் அவனைக் கொண்டாடி மயங்குகிறாள்.

துரை :—ஆண் அல்ல—பெண்ணொருத்தி இன்ன சாயலாள் யார் சொல்வீரா-தெரியவில்லையே(சிரிக்க)

உரு :—நான் கண்டதில்லை.

காமா :—நான் கேட்டதில்லை.

துரை :—சுபத்திரை போன்றில்லையா சிறிது ?

உரு :—(சிரித்து) சிறிதா?—ஆம் சிறிது—பெரிது அல்லவே!

காமா:—உயரம், மேனி-ஒப்பிடலாம்-ஆனால்-

துரை :—இது போதும்.

உரு :—இருவர் சாயலும் வேறு—நன்கறிவேன்—சாமியார் கண்களில் பெண்டிர் அனைவரும் ஒரே படித்தான்.

துரை :—வேறுபடினும் பாதகமில்லை—உயரமும் மேனியும் நடையும் ஒத்துளதென்றீர்—முட்டாக்கிட்டு மறைத்து விடலாம்.

காமா:—ஓகோ! மொட்டைத்தலையை ஒளிக்கவோ !

உரு :—மொட்டை என்பதா, உங்களதுபோல்! மயிர் சுருள் சுருளாக ஆங்கில அரிவையர்போல் அழகே செய்கிறது.

காமா :—நானும் வளர்க்கப்போகிறேன், அதுபோல் —வளர்க்கட்டுமா ?

உரு :—சாமியார் யோசனை இது.

துரை :—சரி—நீயே சொல்.

உரு:—பொன்னிபோல்கிறாள் சுபத்திரை, பொன்னி போல் இவளைத் தோன்றவைப்போம்.

காமா :—எப்படி? வேடம் தரித்தா?

உரு :—நாடகஅரங்குஅயலறைக்குப் போகவேண்டாம்—கூந்தற்கும் மீசைக்கும் பூச்சுக்கும். அவளது பஞ்சைப் பஞ்சாடையை நீக்கி, பட்டு அணிவித்து நகை பூட்டி நாற்றி—செல்வர் வீட்டு ராணிபோல் ஏழைச் சுபத்திரையை மாற்றி—கன்றுமுன் நிறுத்தினால் கற்றாவைத்தேடி ஓடி வாராதா ?

துரை :—இதே என் சூழ்ச்சி...மேலும்

காமா :—நகைகளும் பட்டுக்களும் பொன்னிக்கு இந்தவீட்டில் குஞ்சு பிறந்தபின் அணிந்ததில்லையே...

உரு :—அங்ஙனம் அறைந்த தியாகு—பொய்யன் என்று போட்டமுக்கி அறைந்தீரே கன்னத்தில் !

காமா :—அவனிடம் அவ்வாறு அறைந்தேன்...

உரு:—நானும் கண்டிருக்கிறேன், பலநாள் பண்டிகை நாட்களில் !

துரை :—பண்டிகை நாட்கள் பல அல்ல, சிலவே' அந்நாட்கள் அரிதே அருகி வருவதால் அன்று கண்ட உன் காட்சியைக் கண் எளிதில் மறவாது !—ஆதலால் பண்டிகைக் கோலமே புனைவிப்போம்

உரு :—இப்பொழுதே சுபத்திரையிடம் ஓட்டுகிறாள். சிறிது அணிகோலம் காண, பசை உலர்ந்த பின்போல், பிரிக்கொணு நட்பும் நாட்டமும் குஞ்சு கொள்வள்.

துரை:—"பழைய அன்னையே, முழுதும் முற்றும்" என மதித்து ஒழுகும் குழந்தை.இதுவே என் கடைசி முடிவு. இறந்த சவத்தை எரித்துவிட்டீர்—உயிருள்ள மற்றொருத்தியை — பொம்மையல்ல—மெய்ம்மங்கை ஒருத்தியே வேண்டும். சுபத்திரையும் ஒப்புவள்—

காமா:—அவளைக் கேட்கிறேன் - கெஞ்சுகிறேன்-கொஞ்சுகிறேன்.

உரு :—இன்னொன்று. குஞ்சு இதிலும் ஏமாற மறுக்கலாம். அதற்கும் மருந்து நினைத்துளர் எம்பிரான் தொண்டானந்தர்.

துரை :—கடவுளருளின்றேல் இயலுமா ஏதுவும்?

காமா :—பூஜையறை புகுவோம்—வருக முதலில் பணிந்து தாழ்ந்த பின்னரே நான் மூலிகைச்சாறு குடித்தேன்—ஜிவ்ஜிவ்வென நரம்புகளை இழுக்கிறது.

துரை :—திரைத்துத் துவண்ட தசைநாளங்களை இளமைபாய்ச்சிக் கொழுக்கவைத்து, மழமும் வழமும் அழகும் குழகும் கொழுந்துவிட்டு ஒளிர !

காமா :—உமது அருளின்திறன் ! பணிந்தேன் !

துரை :—நான் நவில நண்ணியது இது. இன்று நவராத்திரி முதல்திருநாள்—நன்னாள்.

காமா :— புதன்கிழமை...நற்கிழமை.

உரு :—பத்தாம்மாதம் பத்தாம்நாள் வருஷம் 1923 என்பதில் கூட அதிர்ஷ்டம் பொருந்தியிருக்கிறது என்றீரல்லவா ? யாரங்கே போகிறது ?

காமா :—நிழற்கால்கள் கத்தரி குதிக்கின்றன—தியாகுபோலும் (விளக்கைத் தூக்குகிறாள்)

உரு :—யார்—மாயாண்டியா வெளியில் போகிறது

துரை :—சுபத்திரை !

காமா :—கொலுவிலிருந்து போகிறது நீயா-சுபத்திரை !

சுப :—(இருட்டில் உரு தெளிவாகப் புலனாகவில்லை) ஆம், நேரமாகிறது-கூட்டிற்குப் பறக்கிறேன்.

காமா :—என்னிடம் சொல்லிக் கொள்ளாமலே—

சுப :—இட்ட பணிகளை முடித்தாச்சு-போகிறேன் உங்கள் பேச்சிடை தோன்றிக் கலைக்க நாணினேன்.

துரை :—இங்குச் சற்று வாரும் அம்மணி. கூட்டிற்கு விரைவது பறவை குஞ்சுக்காக அல்லவா ?

காமா :—குஞ்சு எங்கே ?

சுப :—உள்ளிருக்கிறான்—வேற்றுடை உடுத்தி...

காமா:—இங்குவா—ஒருகொடிக் காரியம்—குஞ்சுவைப் பற்றித்தான் வேண்டுவது உன்னை.

சுப :—என்ன? முதல்நாள் பாட்டுக்கும் ஆட்டுக்குமே வாராமல் திரிகிறாயா என்று தாய் சினங்கொள்வாள் (அணுக)

உரு :—உள்ளென்றே கூறுவன கூறுங்கள்.

காமா :—சரி—வாம்மா !

துரை :—இன்னும் ஒன்று—கடவுளருள் நம்மைக் காத்துப் போற்ற—திருநாளின்று, கோயில்கொண்ட தூர்க்கைத் தாயை-

காமா:—வீட்டிலும் தூர்க்கைப்படமிருக்கின்றதே-

துரை :—கோயில் விக்கிரகம் கும்பாபிஷேகப் புனிதம்பெற்றுப் பீடும் பெருமையும் பொலிவது-கடவுள் தரிசனம் இன்று செய்வ தவசியம், பீடை பெயரும், சீக்கிரம் புறப்படுங்கள்.

காமா :—சரி—வாம்மா (ஒரு விளக்கோடு சுபத்திரையுடன் உள் நுழைகிறான்)

குரல்:—இதோ-நானும் வருகிறேன்-ஒருவார்த்தை.

சுப குரல்—என்னிடமா ?

காமா குரல்:— அவளோடு என்ன பேச்சு.

[ராஜீயா சைகிள்மீது வருகிறாள்]

உரு :—ஏண்டி நுழைந்தாய்—விளக்கின்றி இருட்டில் திரிகிறாய்—கைதியாக்குகிறேன் பார்! (அவளைப் பற்ற)

ராஜீ :—அவசரம், விடு, கையை !

உரு :—எங்கே ? நுழையக்கூடாது.

ராஜீ :—அவளைப் பார்க்கணும்.

உரு :—முடியாது.

ராஜீ :—யாரை ?

துரை :—குஞ்சு இங்கில்லை.

ராஜீ :—குஞ்சு வேண்டாம் ! வேறு !

உரு:-- (சைகிளை இழுத்துத்திருப்பி)புறப்படுவெளியே!

ராஜீ :—சரி—நன்றி ! வீழ்த்தாமல் காத்தாயே— (வந்த வழியே மறைகிறாள்)

துரை :— தொடர்ந்துபோய் வாயிற் கதவுகளைப் பூட்டிவிடு; யாரும் வாரார்—நம் சதியை மிதியார்.

உரு:—மோட்டார் மின்னிப் போகணுமே—பூட்டினைத் திறக்கும் தாமதமும் கூடாதே.

ராஜீயா குரல் :—பூட்டியிருக்கிறது இங்கே—மறுவாயில் வழியே வெளியேகுகிறேன் (தோன்றுகிறாள்)

துரை :—இவள் வந்தது தீக்கருத்துடன்.

ராஜீ :—நற்கருத்தே!

உரு :—வா—நான் துணை வருகிறேன் உடன்! (இடப்பக்கம் புறப்பட)

ராஜீ :—(தயங்கி) இந்தக் கடிதத்தைக் கொடுத்துவிட்டு

துரை :—யாருக்கு.

ராஜீ :—தெரியாது.

துரை :—கொடு, படிக்கிறேன் பெயரை.

ராஜீ :—உமக்கன்று—அவளுக்கு

உரு :—யாருக்கு ?

ராஜீ :—பெயர் தெரியாது என்று முட்டிக்கொள்கிறேனே.

உரு :—சுபத்திரைக்கா—

ராஜீ :—யார் சுபத்திரை—பாட்டி பெயரா (சிரிக்கிறாள்)

துரை :—பாட்டிக்கா-

ராஜீ :—ஆம்!

உரு :—யார் கொடுத்தது...

ராஜீ :—ஒரு துலுக்கன்

துரை :—தியாகுவோ ?

ராஜீ :—ஆம்.

உரு :—கொடு, கொண்டுபோய்ச் சேர்க்கிறேன்.

ராஜீ :—சிச்சீ—நீ வேலையாளா !

துரை :—நீ தபாற்காரியோ ?

ராஜீ :—சைகிள்காரி— தந்திக்காரி—நீ, மோட்டார்க்காரனல்லவா !

உரு :—நானே எஜமானன் என்கிறாயா— சரி— அந்தக் கடிதத்தைப் பார்வையிட உரிமையுண்டு எனக்கு ——அந்தப் போரோலையில் என்ன மிரட்டுகிறான் உருட்டுகிறான்—மருட்டுகிறான்—

ராஜீ :—அல்ல— தெருட்டவே—எனினும் தரமாட்டேன் (வலப்புறத்தில் ஓடி மறைகிறாள்)

உரு :—என்ன எழுதியிருப்பான் ? நம் கருமம் விரைந்தே நடந்தாகணுமே—போய்ப் பார்க்கிறேன் உள்ளே கட்டழகி ஒவ்வினளா என்று.

துரை :—ஐயமில்லை, எதிரியம்பாள் !

உரு :—என்ன அம்பாள்— எதிரி அம்மனோ ?

துரை :—சீ-மாறு சொல்லாள் அவள், நீயும் போய் உருவேற்று போ.

உரு :—நீயுமிங்கே கடவுளை வேண்டிக்கொள். இருளே தகுதி தவத்திற்கு (விளக்கொடு புத்தக அறையில் மறைகிறான்)

[சிறிது நேரம் கழிய, ராஜீயா நடந்து வருவதைத் துரைசிங்கன் காணவில்லை]

துரை :—(திடுக்கெனக் கண்விழித்து) யாரங்கே குஞ்சுவா ? குஞ்சு—யாரடா நீ—நுழைகிறாயா வீட்டுள் ? குஞ்சு—இங்கு வாய்மா—மாட்டாயா? தபாற்காரியா —பிடித்தேன் (ராஜீயா புத்தக அறையில் நுழைகையில், பாய்ந்து அவளைப் பிடித்துக்கொண்டு) போ—வெளியே.

ராஜீ :—போகிறேன்.

துரை:--என்ன தொப்பென விழுந்தது? அலமாரிப் புத்தகங்களை வீழ்த்தி......பிடாரி பேய் இவள் !

ராஜீ:—கதவு என்மேலிடித்த சத்தம்-ஐயோம்மா—வலிக்கிறதே...........

துரை :—(அவளை வெளியிழுத்துக் கதவைச் சாத்தி)— திருட்டுக்கோ—போ வெளியே—(முதுகிலறைய)

ராஜீ :—இதோ கிள்ளினேன்— தொடையில்-வலிக்கிறதா—உனக்கும்? (ஓடி வலப்புறத்தில் மறைகிறாள்)

துரை:-என்ன எழுதியிருப்பான் இடக்கன் இவன். கொத்தவாலுக்குத் தப்பும் உளவும் ஊட்டியிருப்பனோ நம்மைப்பற்றி—ஓட்டம் பிடிக்கிறேன் நான்-ஒருவருமில்லாதபோது—(படி இறங்குகையில் புத்தகஅறைக் கதவு திறப்பதால், ஒளி வீசுகிறது)

சுப :—(தோன்றி) மாட்டேன் — அதற்கெல்லாம் ஏமாறுபவள் அல்லள் அவள். பிறர் பணியும் பட்டும் நான் கந்தலேயாகிப் பரிசென நல்கினும் அணியேன். கட்டாப் புதுத்துணியும் அணியேன்-இரண்டு மூன்று நாள் என்னொடு பழகச் சரியாய்விடுவாள்—நாளை வருகிறேன்.

காமா :—(தோன்றி) சரி—நாளைவா...

உரு:—(பின்தோன்றி) வழி விடுங்கள் போகட்டும்— இதோ விளக்கொளி ! (சைகை காட்ட)

துரை :—அம்மணி—உன்னைப்பணிந்து வேண்டுகிறேன் தொண்டுகிழவன் — இதிலென்ன இழுக்கு உனக்கு? உனக்கே கொடுத்துவிடப் போவதுமில்லை— நீயும் தாழ்மைப்படவேண்டா — பாட்டிக்கும் நஷ்டம்—கொடாள். அரிதாரமும் பொய்க் கூந்தலுமாய் ஓடிக் கூத்தாடச் சொல்கிறோமா? பொன்னிபோல்

காமா :—அவளை நேரே கண்டிருக்கிறாளிவள்.

துரை :—பின், குறை என்ன — பொன்னிபோலணிந்துவா—குஞ்சுவை உன்முன் கொணர்ந்து படத்தின் முன் இருவரையும் நிறுத்திப் பிரார்த்தனைசெய்கிறேன்—அவ்வளவே—பயமென்ன ?

உரு (ஒரு குதி குதித்து) பாம்பு -பாம்பு - விளக்கைக் காட்டுங்கள் —

காமா :—(கைவிளக்கொளியால் தரையை அலசுகையில்) பாருங்கள் துருவித்துழாவி...—

சுப :—அந்தப் புத்தகமா......

உரு :—வாசலில் மறைந்ததோ யாதோ (புத்தகத்தைக் காலால் உதைத்து) என் காலில் குறுகுறு வெனப் பட்டது இந்த ஈரப் புத்தகமோ ?

துரை :— பாம்பு தேள் பயமின்றி அந்தத் தபாற்காரி வருவது என்ன ஆச்சரியம்! இருட்டில்!

உரு :—ஆம்—; சொல்ல மறந்தேனே— ராஜீயா ஒரு கடிதம் கொணர்ந்தாள் உமக்கு—தியாகு கொடுத்ததாக...

சுப :—எனக்கா ?

உரு :—உனக்கெழுதத் துணிந்து விடுவனோ—?

காமா :—எங்கே அது—என்னை வைதிருப்பான்—நான் பார்க்கப் போவதில்லை வசைப்பாட்டை, நீ பார்க்கச் சுதந்தர முண்டே—என்ன மிரட்டுகிறான்.

உரு :—தரேன் என்று திரும்பிவிட்டாள் !

சுப: —கடிதத்தைக் கொடுக்கவில்லையா ?

துரை :—இல்லை. என்ன சொல்கிறாய் பதில் எம் யோசனைக்கும் பூசனைக்கும் ?

சுப :—சரி—5, 10 நிமிஷங்களில் வருகிறேன். (புத்தகத்தை எடுக்கக் குனிவது தெரிகிறது, மறைகிறாள்)

காமா :—என்ன புத்தகம்—குஞ்சுவுடையதா—

உரு :—எதோ—ஈரம் சொட்டச் சொட்ட! பாம்பு போன்றதே.

துரை :—கால் மிதித்ததென்று பணிந்து கண்மீது ஒத்திக்கொள்கிறாள் போலும்—நல்ல பெண்—சீக்கிரம் வரவேண்டும்.

காமா :—சாமியாரின் திறனே திறன்—வெம்மொழியல்ல மென்மொழியே வெல்மொழி! செம்மொழி!

உரு :—நீங்களும் சென்று—எல்லா நகைகளையும் எடுத்துக் கொடுங்கள்! சீக்கிரம்!

காமா :—எந்தப் புடவை உடுத்தட்டும்?

துரை :—விலையுயர்ந்ததே நலம்!

உரு :—நீலப்புடவை! எனக்குப் பிடித்தது அதே!

காமா :—சரி — குஞ்சுகூடக் கூறினாள் தியாகுவுக்கு, நீலமுடுத்தி வருமாறு.

துரை:—மற்றச் சேலைகளையும், துணிகளையும் கூட எடுத்து வெளியில் கையருகே வைத்திருங்கள்-குஞ்சுவைக்கேட்போம், அவள் அகத்ததையும் நன்கறிவோம்.

உரு :—என்ன முன்யோசனை !

காமா:—இரவுவேளை-யாரேனும்திருடிச்சென்றால்?

துரை :—பயமில்லை — போங்கள்—நாங்கள் அறியாக் கள்வர் உளரோ! விளக்கு இங்கிருக்கட்டும்.

காமா :—சரி—அப்படியே—(மறைகிறாள்)

உரு :—முதலில் அசடன்போல் தழதழத்தாய்—இப்பொழுது செழித்துத் தழைத்துவிட்டனை. பயப்படாதே. நகைகள் நங்கைமேல்! மற்று—சேலைகளையும் வெளிக்கிளப்ப வேண்டுமே—எப்படி ? திரௌபதை நாடகததில்போல் அவற்றையெல்லாம் சுபத்திரைக்கு ஒருங்கு உடுத்தி அரக்கியாக்க இயலாதே.

துரை :—போடா முட்டாளே—திரௌபதை நாடகம் ரொம்பவும் கண்டவன் நீ! உனக்கோ இவ்வீட்டில் மூலை முடுக்குகள் எல்லாம் செல்ல உரிமையுண்டு—சுருட்டி வரலாம். ஆனால் ஒன்று உரைப்பேன். புடவை, பெரியமூட்டை.! வேண்டாம்! வைக்கோற் போரைத் திருடி மடியில் ஒளிக்கமுடியுமா ?

உரு :—திருடன் அதற்குள் பதுங்கி ஒளியலாமே-, பிடிபடாமல் !

துரை :—பொன் போதும்!

உரு :—வெள்ளியும் வேண்டும், நம் கட்டமுகியைக் கனிஞடையிலன்றோ கண்குளிரவும் சிவக்கவும் கண்டு களியாடவேண்டும். நகைஎதற்கு—ஆடையே மானிடட உடற்கு மாற்று ஏற்றுவது.

துரை :—சரி—உன் மனம்போல் திரி. உன் திறமையும் அறிவும் கூர்மையும் யாரே அறிவர் !

ஒரு குரல் :—நானறிவேனே.

உரு :—மாயாண்டியா—அவன் என் கைக் கூர்மையையும் அகலத்தையும் அறிவான் (மெல்ல) இவனை எங்ஙனம் கழித்தகற்றுவது இப்போது? தடைக்காரனாக வருகிறானே.........

மாயா :—(மச்சிலிருந்து இறங்கி வந்தவன் விளக்கொளி வட்ட மடைந்து குனிந்து) சாமியாரே—பாருங்கள் நீங்களே—உருமபிள்ளை செய்ததை—

துரை :—என்ன புது மாயம் ?

உரு :—எப்போது, என்ன ?

மாயா :-இப்பொழுது செய்த மாயமே! மோசமே!

உரு :—பழங்களா - இன்னும் காயாயிருக்கு என்றழுகிறயா-இத்தனை நேரம் கடித்துக் கடித்துக் கதுவ முடியவில்லை என்று கலுழ்கிறாயா ?

மாயா:—அழுகிக் கரைந்து நீராகக் கொட்டுகிறது பழம். என் கையில் பாருங்கள் பிசின்—விரல்களைப் பிரித்தாள முடியவில்லை.

துரை :—நீர் பட்டதா ?

மாயா :—சாரலில் நனைகிறதோ என்று காத்திடப் போனேன். வழிமறித்தாள் அம்மாள், மாடு கறக்க இழுத்துச் சென்றாள். வந்து பார்த்தேன்—மழை நீர் பட்டிருக்கலாம்—

உரு :—அவ்வளவு தானே— துடைத்துவிடு.

மாயா :—துடைத்துத் துணியெல்லாம் கறை—வாழைக் கறையைவிட மோசம் போலும்—சீலை-சாறே—நாளைப் பகலில் வெளிச்சமாகிவிடும்.

உரு :—பழத்தில் சாறிருக்காதா— மடையா ?

மாயா :—காய் கெட்டியாயிருக்கும்போதே சாறு வழியுமானால்— நூறு நாள் தாங்குமோ ?

உரு :—பார்—பொறுமையிலி நீ.

மாயா :—சாறு என்றெண்ணி நக்கினேன்— கசக்கின்றதே விடமும் வேம்புமாய் !

துரை :—மாங்கனி இனிப்பு—மாங்காய் கைப்பு-அறிந்திலை நீ. பருவம் வரினல்லவோ—சற்றுப்பொறு.

மாயா :—வாசனையாயில்லையே—காயும்மணக்குமே.

உரு :—வெங்காயம் நன்மணமோ—தின்கிறாயே நீ

மாயா :—ஆம் ! பழகிப்போச்சு !

துரை: —இதுவும் பழகப்பழக இனித்துச் சுவைக்கும்.

உரு:— சுருட்டுகள் போல்தானிதுவும். நீ முட்டாளாயினும் குருடல்லவே-போ-மூக்கு மிருக்கல்லவா—காட்டு!

மாயா :—இதோ—இங்கே—பிய்த்திடவேண்டாம்!

துரை :—வாசனை என்பது என்ன தெரியுமா? கட்புலனாகாமல் மூக்குமட்டும் முரன்றுணருமாறு காற்றில் பரவிய வீசும் நாற்றம்—

மாயா :—நாற்றமா வாசனையா?

உரு :—பேதையே—நாற்றம் என்றால் நன்மணம் தான். புத்தகம் படித்திலாதவன் நீ—இந்தப்பழம்—மாம்பழம், சித்திரையில் பறித்தது—இப்போ—புரட்டாசி ஒன்பது மாதங்களாக வாசனை யெல்லாம்...

மாயா :—ஒன்பது மாதமாய் விட்டதோ!

உரு :—நீயே எண்ணு!

மாயா :—சித்திரை, வையாசி, ஆனி—அப்புறம் நீங்கள் எண்ணுங்கள் சாமியாரே...

துரை :—சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை மூலம்-பூராடம்...

மாயா :—சரி-ஏழுதான்-ஒன்பது என்றீர்களே !

துரை :—(உரக்க) பூராடம்!! புரட்டாசியன்று. உத்திராடம் திருவோணம், அவிட்டம், சதயம் பூரட்டாதி...

மாயா :—மேலே இன்னும் எண்ணுங்கள்!

உரு :—இதுதான் — இன்னும் எதற்கு—காதும் செவிடா நீ. எத்தனை யாச்சு எண்ணினபா—

துரை :—12 மாதங்களாய்விட்டன.

மாயா :—ஒரு வருஷமாச்சு ?

உரு :—ஆம்—ஒன்பது மாதத்திற்கும் மேல்.

மாயா :—போன புரட்டாசிச்குக் காய்த்த பழம்—இன்னும்!

உரு :—ஆம்!

மாயா:-புரட்டாசியில் காய்ப்பதானல் இந்தப் புரட்டாசியில் காய்க்கக் கூடாதோ-இந்த வருஷப் பழம் தானே—பொய்யர் நீங்கள் !

உரு :-தடி மடையா-சித்திரையில் காய்த்தது என்கிறேன்—மீண்டும்......என்ன வைதாய் சாமியாரை--பொய்யர்!—வா இங்கே--கன்னத்தைத் திருப்பு-என் கைகளைத் தீட்டுகிறேன். (தன் அங்கங்களைத் தேய்க்க)

மாயா :—என்னவோ—ஒன்றுமே புரியவில்லை. நீங்கள் சொன்னால் சரி...(தூர விலகுகிறான்)

துரை :--அப்படிப் பணிந்துபோ மாயாண்டி-பொய் சொல்வோமா—என் தாடி எரிந்துவிடதா தானே!

உரு :—இவ்வளவு நாட்களாய்விட்டதால் நாற்றம் முழுதும் மறைந்து அவிந்துவிட்டது.

மாயா :—நாற்றம்தானே—நல்லதாச்சு !—நாற்றப் பழத்தின் நாக்கிடுவர் யார்—சாமியாரே கோவிக்காமல் இதோ-ஒருபழம் எடுத்துக்கொள்க...அடியேன் காணிக்கையை !

துரை :—மூன்னதாகவே—அப்பொழுதே —புன்மாலையும் பொல்லா இரவும் புகாமுன்னரே நீ படைத்திருப்பின் புசித்தருளி யிருப்போம்—வேண்டாம்—விரதம் வியலாகாது.

மாயா:—(தன் தலையில் அடித்துக்கொண்டு) மூடனே, கூடனே நான்—நாளை தருகிறேன்.

உரு :—சரி—பத்திரமாய் வை—மச்சில், போ—விளக்குக் காட்டட்டுமா — கவனம்—விழுந்தால் —உடைந்துவிடும்...

மாயா :— (மச்சேறுகையில்) விழுந்தால்....என்ன—உடைந்துவிடுமா...

துரை :—உருண்டுவிடும்...

மாயா :—சாக்கிரதையா யிருக்கிறேன்(மறைகிறான்)

உரு :—என் வாயாலேயே கெட இருந்தேன்.

துரை:—(கையமர்த்தி) பேசாதே-கப்சப்—அவர்கள் பேசுவது கேட்கிறது.

உரு :—என்ன—எனக்குக் கேட்கவில்லையே !

துரை :—சுபத்திரை மாட்டேன் என்கிறாள்.

உரு:—பின், பலாத்காரமாய் எடுத்தேக வேண்டும்—தயாராயிரு,

துரை :—ஆகட்டும்— ஆனல்

உரு :—5000 ரூபாய் நகைகளை அடித்தேக முடியாதே— பொறுப்போம், பூமியாள்வோம்

துரை :—வருகிறார்கள் !

உரு:—சாமியார் நீ— விடாமுண்டனாய் உருக்கமாய் வேண்டிக்கொள்—மறுக்கமாட்டாள். [புத்தக அறை வழியே காமு வருகிறாள் ]

துரை :—சரி புறப்படுவோம் !

உரு :—வெள்குகிறாளோ சுபத்திரை—பிறராடையில் எம்மைக்காண ? ஆம், இயல்பே !

காமா :—என்ன எடுத்தோதினும் இணங்கிலள்.

துரை :—சரி என்னல் குஞ்சுவைத் திருத்த முடியாது. முயன்று முனையவும் இப்பெண் பிடிகொடாவிடின்—

சுப :—(முன் வந்து) நான் ஏழையே எனினும் இரவலும் இரப்பும் இதுகாறும் இழிந்திலேன்—என் தாயும் பிறரும்— பிரிவரும்—

காமா :—பிறர் உனக்கு யாருளர் ?

சுப :—அன்பரே யில்லையா (சிரிக்க) ராஜீயாளங்கே?

உரு :—என்ன விழுந்தது— அரவம் !

காமா :—பாம்பாயிருக்காது-எதோ, புத்தகத்தைப் பீரோவிலிருந்து எலி தள்ளியிருக்கும்.

துரை :—"குஞ்சுவின் நலமே" கூர்ந்து நோக்குக, அம்மணி (குமபிடுகிறான் அவளை)

காமா :—ஆம், குஞ்சுவின் நலமே.

உரு :—குஞ்சுவின் நலமே—நானும் பல்லவி பாடுகிறேன்.

சுப :—அடே-அதே-சொற்கள்! படித்தாற்போல்!

உரு :—இன்னும் யார் சொன்னன்-மாயாண்டியா-வாலாண்டியா?

சுப :—மாயாண்டி! (சிரிக்கிறாள்)

காமா :—மாட்டாயா? மோட்டாரில் அவளை வீட்டுக்குக் கொண்டு விட்டுவா-எடுத்துவைத்ததெல்லாம் வீண், மீண்டும் அடுக்கணும் தண்டவாளப் பெட்டியில்!

உரு :—சரி-ஏறம்மா! வாருங்கள் சாமியாரே-சீக்கிரம் அவைகளில்லாவிடின் போகட்டும்! உன் வீட்டிற்குப் புறப்படு!

துரை :—சரி-ஏறம்மா-சுபத்திரை! (எழுகிறான்)

சுப:—பாட்டி, ஒவ்வினேன். சாமியார் சூழ்வது பலிக்கிறதோ பார்த்துவிடுவோம் - ராஜீயா எங்கே, குஞ்சு எங்கே?

உரு :—அவளை நான் வலைபோட்டுப் பிடிக்கிறேன்-(காமுவும் சுபத்திரையும் உள் மறைகின்றனர்)

துரை :—சீக்கிரம்!

உரு :—உன் சும்பிடும் கூர்நோக்கும் குழைவுமே வென்றது.

துரை :—சரி—உன் அலுவல்களைப்பார்.

உரு :—ஆம், விடை பெற்றுக்கொள்ளணுமன்றோ இந்த என் பங்களாவை விட்டு நீங்க. அவர்கள் உள்ளிருக்கும்போதே என் பெட்டி பேழைகளை மோட்டாரில் என் காலுக்கடியில் அடுக்கவேண்டும்.

துரை :—குஞ்சுவைத் தேடவேண்டாமா ?

உரு :—அவள்பாடு நமக்குக் கவலையில்லையே-வாராமலிருப்பதே நலம்...வந்தாலும்—

குஞ்சுகுரல் :—என் செய்வாய்!

உரு :—ஐயையோ !

துரை:—முத்தமிட்டுக் கொஞ்சித் தாலாட்டிச் சீராட்டிப் பாராட்டி உச்சிமோந்து கோதுநீக்கி...

உரு :—தொயில் எழுதி, தொட்டிலாட்டி, அம்புலிகாட்டி, சீரையுடுத்தி, பாலூட்டி எல்லாச் செல்வமும் சிறப்பும் நிறைத்துப் பொழிவோம்—வா, என்னிடம் வா, என் அறைக்குத் தூக்கிக்கொண்டேகிறேன்—வா, ஏறு முதுகிலே—உப்பு தூக்குகிறேன்.

ஆறெழுத்தந்தாதி :—அகத்திய முனிவர் அருளிச்செய்த ஆறெழுத்தந்தாதி என்னும் இந்நூல், முருகக்கடவுளை முழுமுதற் கடவுளாக உபாசனைசெய்வதற்குரியதாய் ஷடாக்ஷரத்தின் வைபவத்தை அகத்திய முனிவரே பாடியதெனக் கருதப்படுவது. நூறு செய்யுள்கள் இந்நூலில் உள. பாராயணத்திற்குரியது. Dr. V. S. அருணாசலம்பிள்ளை அவர்கள் இயற்றிய பதவுரை விளக்கம் முதலியவைகளைக் கொண்டது. விலை அணு 12. தபால் சார்ஜ் வேறு

ஏமாங்கதத்திளவரசன் :—இது ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயரால் எழுதப்பட்ட நாவல்நூல் இலக்கிய நலம் துலங்கும் இக்காதற்கதை படிப்பவரைக் கவரும் தன்மையது. விலை ரூ. 1. தபால் சார்ஜ் வேறு

கலா நிலயம், வேளாளர் தெரு, புரசை, சென்னை.

# களவியற் காரிகை

[909-வது பக்கத் தொடர்ச்சி]

**குறிப்பு** :—சென்றவாரத்து இதழின் 909-வது பக்கத்தில், "புன்னை மலர் தூஉய்..........."எனத் துவக்கும் பாட்டிற்கும், "நல்லளந்தாலும்........" எனத் துவக்கும் பாட்டிற்கும் இடையே வந்திருக்கவேண்டிய இப் பாகம் முழுதும் அங்கு விடுபட்ட படியால் இன்றைய இதழில் வரலாகின்று; இதனை அவ்விடத்தில் தொடுத்து ஓதிக்கொளல் வேண்டும்.

---

இரவுக்குறி கழித லென்பது அல்லகுறிப்பட்டு மீண்ட தலைமகன் வருந்துதல். அதற்குச் செய்யுள் :—

மாற்றே னெனவந்த காலனை யோல மிடவுடைத்த[குடுமி
கோற்றேன் குளிர்தில்லைக் கூத்தன் கொடுங்குன் றினீள்
மேற்றேன் விரும்பு முடவனைப் போல மெலியுநெஞ்சே
யாற்றே னரிய வரிவைக்கு நீவைத்த வன்பினுக்கே.

—திருக்கோவை - 150.

ஏரார் குழன்மட வாளை யெளியளென் றெண்ணிவந்து
தீரா விழுமந் தாய்தென்னன் சேவூர்ச் செருவடர்த்த
காரார் களிற்றுக் கழனெடு மாறன் கழல்பணிந்து
சேரா வரசரிற் றேய்வா யளியவென் சிந்தனையே.

—பாண்டிக்கோவை.

இல்லோ னின்பங் காமுற் றாஅங்
கரிதுவேட் டனையா னெஞ்சே காதலி
நல்கா ளாகுத லறிந்தாங்
கரிய ளாகுத லறியா தோயே.

—குறுந்தொகை - 120.

குணகடற் றிரையது பறைதபு நாரை
திண்டேர்ப் பொறையன் றொண்டி முன்றுறை
[ய]யிரை யாரிரைக் கணவந் தாங்குச்
சேய ளரியோட் படர்தி
நோயை நெஞ்சே நோய்ப்பா லோயே.

—†குறுந்தொகை - 128.

வரிவளைப் பணைத்தோண் மடந்தையை யுள்ளி
யரிதி னசைஇய நெஞ்சம்
பெரிது மெவ்வம் பெறற்பா லோயே.

—பொருளியல்.

அன்னநடைப் பேதை யருமை யறியாதே [ருட்கண்
யென்னை வருத்துகின்ற தென்கொலோ — துன்னி
வஞ்சமே யன்ன மலர்விழியா லீடழியும்
நெஞ்சமே கட்டுரையாய் நீ.

—கிளவித்தெளிவு.

'குறியெனப் படுவ திரவினும் பகலினும்
அறியக்கிட [ந்த] விடமென மொழிப' —இறை-18.

என்னு *மொழிமாற்றுச் சூத்திரத்துள் இவையெல்லாங் கண்டுகொள்க.

இரவுக்குறி முற்றும்.

கழிபடர்கிளவி யென்பது இவ்வகை வந்து ஒழுகாநின்ற தலைமகனைக் காணும் பொழுதிற் காணாப்பொழுது பெரிதாகலி னாற்றாளாய தலைமகள் சொல்லுதல். அதற்குச் செய்யுள்:—

மாதுற்ற மேனி வரையுற்ற வில்லிதில் லைநகர்சூழ்[காள்
போதுற்ற பூம்பொழில் காள்கழி காளெழிற் புள்ளினங்
கேதுற் றழுதியென் னீர்மன்னு மீர்ந்துறை வற்கிவளோ
தீதுற்ற தென்னுக்கென் னீரிது வோநன்மை செப்பு
[மினே.

—திருக்கோவை - 174.

தாதலர் நீண்முடித் தார்மன்னன் மாறன்றண் ணங்குமரிப்
போதலர் கானிற் புணர்குறி வாய்த்தாள் புலம்பிவைய
ஏதிலர் நோய்செய்வ தோநின் பெருமை யெனநெருங்கிக்
காதலர் தம்மைக் கழறினெ னானங் கருங்கடலே.

—பாண்டிக்கோவை.

[கடந்தை
மடலே சொரிதொங்கல் வங்கர்குலோத் தமன் வண்
யடலே புரியு மரும்பனி வாடையை யஞ்சுமஞ்சி
யுடலேயு மன்றி யுயிருங் கிடந்ததென் றேரொருகாற்
கடலே கருங்கழி யேயுரை யீரெங்கள் காதலர்க்கே.

—வங்கர்கோவை.

புள்ளின்மான் றேராழி போன வழியெல்லாந்
தெள்ளுநீ ரோதஞ் சிதைத்தாய்மற் றென்செய்கோ
தெள்ளுநீ ரோதஞ் சிதைத்தாய்மற் றெம்மோடிங்
குள்ளாரோ டுள்ளா யுணராய்மற் றென்செய்கேன்.

—சிலப்பதிகாரம் - கானல் - 34.

ஒண்டூவி நாராய்நின் சேவலு நீயும்
வண்டூதுங் கானல் வைகலுஞ் சென்றிராற்
பெண்டூது வந்தே மெனவுரைத்துக் காதலரைக்
கண்டீர் கழறியக்காற் காதலர் கடிபவோ.

—பழம்பாட்டு.

கையறுகிளவி யென்பது தாய் துஞ்சாமை, நாய் துஞ்சாமை, ஊர் துஞ்சாமை, காவலர் கடுகுதல், நிலவு வெளிப்படுதல் என இவைமுதலாகிய காப்புமிகுதி சொல்லி வரவு விலக்குதல். அதற்குச் செய்யுள் :—

இன்னற வார்பொழிற் றில்லை நகரிறை சீர்விழவிற்
பன்னிற மாலைத் தொகைபக லாம்பல் விளக்கிருளின்
றுன்னற வுய்க்குமில் லோருந் துயிலிற் றுறைவர்மிக்க
கொன்னிற வேலொடு வந்திடின் ஞாளி குரைதருமே.

—திருக்கோவை - 175.

வாருந்து பைங்கழற் செங்கோல்
வரோதயன் வஞ்சியன்னாள்
சேருந் திறமென்னை தேந்தண்
சிலம்பனைத் திங்கள்கல்சேர்ந்
தாருந் துயின்றிடங் காவல
ரோடன்னை யுள்ளுறுத்தெல்
லாருந் துயிலினுந் துஞ்சா
ஞமலி யரையிருளே. —பாண்டிக்கோவை.

ஆயுந் தமிழ்மன்னன் செங்கோ லரிகே சரிமுனைபோற்
றேயு நினைவொடு துஞ்சா மடந்தையிச் சேயிழையாள்
தாயுந் துயிலலுற் றாளின்ன தாற்றனிக் கானெடுந்தேர்
காயுங் கதிர்கான் மலைபோய் மறைந்த கனையிருளே.

—பாண்டிக்கோவை.

மாவுங் களிறு மணிநெடுந் தேரும்வல் லத்துப்புல்லாக்
கோவுந் துமியவை வேல்கொண்ட கோனந்தண் கூட
[லன்னாய்
பூவும் புகையும் விரையுங் கமழ்ந்துபொன் னாருலகு
மேவும் விழைவொடு துஞ்சா திரவும் வியனகரே.

—பாண்டிக்கோவை.

[லைச்
நறைக்கண் மலிகொன்றை யோனின்று நாடக மாடுதில்
சிறைக்கண் மலிபுனற் சீர்நகர் காக்குஞ்செவ் வேலிளைஞர்
பறைக்கண் படும்படுந் தோறும் படாமுலைப் பைந்தொடி
கறைக்கண்மலி கதிர்வேற்கண் படாது கலங்கினவே.[யாள்

—திருக்கோவை - 258.

அடிக்கண் ணதிருங் கழலரி கேசரி தெவ்வழியக் [னார்
கொடிக்கண் ணிடியுரு யேந்திய கோன்றமிழ்க் கூடலன்
வடிக்கண் ணிரண்டும் வளநகர் காக்கும்வை வேலிளைஞர்
துடிக்கண் ணிரண்டுங்கங் குற்றலை யொன்றுந் துயின்
[றிலவே.

—பாண்டிக்கோவை.

---

† 'ஐங்குறுநூறு' என்பது தொன்னூல்-நிலயப் பிரதி.

* 'இரவினும் பகலினும் என்றாராயினும் மொழிமாற்றிப் பகலின்கண்ணும் இரவின்கண்ணுமெனக் கொள்க. என்னை? பகற்குறி நிகழ்ந்தபின்னை இரவுக்குறி நிகழற்பாலதாகலான். அவ்வொழுக்கம் நிகழ்ந்த முறையான் நோக்கி மொழிமாற்றுச் சூத்திரமாகப் பொருளை யுரைக்கப்படும்'—இறை, 18, உரை.

சென்று செருமலைந் தார்செந்நீர்
 மூழ்கச் செருமலைந்தார் (? நிலத்தை)
வென்று களங்கொண்ட கோன்றமிழ்
 நாடன்ன மெல்லியலாய்
இன்றிவ் விருள்தா னிடங்கொண்ட
 தெவ்விடஞ் சென்றுகொல்லோ
நின்று விசும்பிற் பகல்போல்
 விரியு நிலாமதியே.

—பாண்டிக்கோவை.

இவையெல்லாம் வந்த செய்யுள் :—

இரும்பிழி மகாஅரிவ் வழுங்கல் மூதூர்
விழவின் றாயினுந் துஞ்சா தாகும்
மல்ல லாவண மறுகுடன் மடியின்
வல்லுரைக் கடுஞ்சொ லன்னை துஞ்சாள்
பிணிகொ ளருஞ்சிறை யன்னை துஞ்சிற்
றுஞ்சாக் கண்ணர் காவலர் கடுகுவர்
இலங்குவே லிளைஞர் துஞ்சின் வையெயிற்று
வலஞ்சுரித் தோகை ஞாளி மகிழும்
அரவவாய் ஞமலி குரையாது கடியிற்
பகலுரு வுறழ நிலவுகான்று விசும்பி
னகல்வாய் மண்டில நின்றுவிரி யும்மே
திங்கள் கல்சேர்பு கனையிருள் மறையி
னில்லெலி [வல்] சிவல்வாய்க் கூகை
கழுதுவழங் கியாமத் தழிதகக் குழறும்
வளைக்கட் சே[வ]ல் வளர்துயின் மடியின்
மனைச்செறி கோழி மாண்குர லியம்பும்
எல்லா மடிந்த காலை யொருநாள்
நில்லா நெஞ்சத் தவர்வா ரலரே
அதனால், அரிபெய் புட்டி லார்ப்பப் பரிசிறந்
தாதி போகிய பாய்பரி நன்மா
நொச்சி வேலித் தித்த னுறந்தைக்
கன்முதிர் புறங்காட் டன்ன
பன்முட் டின்றாற் றோழிநங் களவே.

—நெடுந்தொகை - 121.

யாயே துயின்மறந் தனளே யாயினு
நாயு மூரு நனிதுஞ் சலவே
காவல ரதனினுந் துயிலார் துயிலினு
மாய்கதிர் மதியநின் றலரும்
யாவ தாங்கொ லேந்திழை நிலையே.

—பொருளியல்.

ஊர்துயிலி னுய்துயிலா வொண்டொடி யூர்காக்கும்
பேர்துயிலு மாறொருகாற் பெற்றாலும்—நேர்துயிலா
வின்னை நெடுநிலா வல்லும் பகலாகு
மென்னை வருவதுநீ யிங்கு.

—களவித்தெளிவு.

ஆறு பார்த்துற்ற வச்சக்களவி யென்பது தலைமகன் வரும்வழியி னுள்ள அச்சத்தைச் சொல்லி வரவு விலக்குதல். அதற்குச் செய்யுள் :—

தாருறை கொன்றையன் றில்லைச் சடைமுடி யோன்கயிலை
நீருறை கான்யாற் றளவில நீந்திவந் தானினது
போருறை [வேல்]வ[ய]ப் பொங்குரு மஞ்சுக மஞ்சிவருஞ்
சூருறை சோலையின் வாய்வரற் பாற்றன்று தூங்கிருளே.

—திருக்கோவை - 176.

பிறவா ரணங்கு மனுக்குலை யார்கழல் பேணினரென்
றறைவா ரணங்க ளரற்று மரங்க ரருளிலர்போன்
மறவா ரணங்கள் மடங்கலுக் கோடும் வழிபழிவந்
துறவா ரணங்கின் பொருட்டுர வோய்வர லோங்கிருளே.

—கோயிலந்தாதி.

அன்பெதிர்ந் தாலும் வருதல்பொல்
 லாதைய வாரமருள்
முன்பெதி ரார்படச் சே(வ்)வைவென்
 றான்முகி றோய்பொதியிற்
பொன்பிதிர்ந் தாலன்ன மின்மினி
 சூழ்புற்றின் முற்றியசோற்
றின்பிதிர் வாங்கியெண் கேறு
 சிலைத்துண்ணு மீண்டிருளே.

பாண்டிக்கோவை.

பிறையார் நறுநுதற் பேதைதன் காரணத் தாற்பெரும
மறைநா ளிரவில் வருவது நீயொழி வச்சிரநாட்
டிறையா கியகலு பாமுத லானவர் யானைகளின்
றறைவாரும் விஞ்சத் தடவிகள் சூழு ம[ணி]வரையே.

—பல்சந்தமாலை.

கரைபொரு கான்யாற்றங் கல்லத ரெம்முள்ளி வருவிராயி
னரையிருள் யாமத் தடுபுலி யேறஞ்சி யகன்றுபோக
நரையுரு மேறுநுங்கை வேலஞ்சு நும்மை
வரையர மகளிர் வெளவுத லஞ்சுதும் வாரலையோ.

—பழம்பாட்டு.

சூரல் [ப]ம்பிய சிறுகான் யாறே
சூரர மகளி ராரணங் கினரே
வார லெனினே யானஞ் சுவனே
சார னாட நீவர லாறே.

—பழம்பாட்டு.

வார[ா] தீமோ சார னாட
வுறுபுலி கொன்ற தறுகண் யானை
யாறுகடி கொள்ளு மருஞ்சுர
மூறுபெரி [து]டை[ய] தமியை நீயே.

—சிற்றெட்டகம்.

நெடுவரை நன்னாட நீள்வே றுணையாக்
கடுவிசைப்பா ளாரருவி நீந்தி—நடுவிருளி
[னின்]னு தரவரலி [னெ]ன்கோதை மாதராள்
என்னுவ ளென்னுமென் னெஞ்சு.

—ஐந்திணை.

கல்லதருங் கான்யாறு நீந்திக் கரடிகளும்
கொல்கரியுஞ் செய்யுங் கொலைபிழைத்து—வல்லிருளிற்
சாரன்-மலைநாட தன்னந் தனிவந்து
சேரல் சிறியா டிறத்து.

—களவித்தெளிவு.

பகல்வர லென்பது இவ்வகை யிரவுக்குறி வந்தொழுகுந் தலைமகனை யிரவினது ஏதங் காட்டிப் பகல்வாவென்று சொல்லுதல். அதற்குச் செய்யுள் வருமாறு :—

கழிகட் டலைமலை வோன்புலி யூர்கரு தாதவர்போற்
குழிகட் களிறு வெரீஇ[யரி] யாளி குழீஇவழங்காக்
கழிகட் டிரவின் வரல்கழல் கைதொழு தேயிரந்தேன்
பொழிகட் புயலின் மயிலிற் றுவளு மிவள்பொருட்டே.

—திருக்கோவை - 255.

அடிமே லகலிட மெல்லாம் வணங்க வமரர்தங்கோன்
முடிமேல் வளையுடைத் தானெடு மாறன்முன் னாளுயர்த்த
கொடிமே லுருமதிர் கூரிருள் வாரன்மி னீர்மகிழும்
படிமே[ம]ற் பகல்வம்மின் வந்தால் விரும்புமென் பல்
 [வளையே.

— பாண்டிக்கோவை.

நிரைதா ரன்ன நெடுங்கழை யுகுத்த
விரிகதிர் நித்திலம் விரித்தலி
னிரவும் பகல்போ லிலங்குமா லிவணே.

—பொருளியல்.

இரவு வர லென்பது இவ்வகை யிரவுக்குறி விலக்கிப் பகல்வர வுரைத்த தோழி பகல் வருவானை யிரவு வரலுரைத்தல். அதற்குச் செய்யுள் வருமாறு :—

இறவரை யும்பர்க் கடவுட் பரா[ய்]நின் றெழிலியுன்னிக்
குறவரை யார்க்குங் குளிர்வரை நாட கொழும்பவள
நிறவரை மேனியன் சிற்றம் பலநினை யாதவர்போ
லுறவுரை மேகலை யாட்கல ராம்பக லுன்னருளே.'

—திருக்கோவை - 260.

அஞ்சா தமர்மலைந் தாரள நாட்டட னேயவிய
நஞ்சா ரிலங்கிலை வேல்கொண்ட தென்னவ னாடனைய
பஞ்சார கலல்கு லாட்குப் பகல்நீ வரிற்பழியா
மஞ்சார் சிலம்ப வரவென்ன லூன மயங்கிருளே.

—பாண்டிக்கோவை.

வரிவளைத் தோழி யொருதனி யொழியப்
பிரிது மென்றி யாயிற் பெரிதழிந்
தலமரல் வாழி யைய
இருளிடை யெய்தலு மெய்துமா னமக்கே.

—பொருளியல்.

இரவும் பகலும் வரவொழி யென்பது தலைமகன் வரைவு விரைதல்காரணமாக இரவின்கண்ணும் பகலின்கண்ணும் வரவொழியெனத் தோழி சொல்லுதல். அதற்குச் செய்யுள் வருமாறு:—

[ளெருழும்பிற்
சுழியா வரும்பெரு நீர்சென்னி வைத்தென்னைத் தன்
கழியா வகைவைத்த சிற்றம் பலவன் க[ர]ந்தெருமான்
விழியா வருள்புரி மென்குழ லாடிறத் தையமெய்யே
பழியாம் பகல்வரி னீயிர வேதும் பயனில்லையே.

—திருக்கோவை - 261.

ஓதங் கடைந்தமு தாக்கி யமரர்க் குணக்கொடுத்துப்
பூதம் பணிகொண்ட பூழியன் மாறன் பொதியிலின்வா
யேதம் பழியினொ டெய்துத லானிர வும்பகலும்
மாதங் கனைந்துமென் னேக்கி திறத்தைய வாரன்மினே.

—பாண்டிக்கோவை.

கறங்கு வெள்ளருவி பிறங்குமலைக் கவாஅற்
றேங்கம ழிணர வேங்கை சூடித்
தொண்டகப் பறைச்சீர்ப் பெண்டிரொடு தொகைஇ
மறுகிற் றூங்குஞ் சிறுகுடிப் பாக்கத்
தியன்முரு கொப்பினை வ[ய]நாய் பிற்படப்
பகல்வரிற் கவ்வை யஞ் [சு]து மிகல்கொ
ளிரும்பிடி கன்றொடு விரைஇக் க[யவ]ாய்ப்
பெருங்கை யானை கோட்பிழைத் தொரீஇ
யடுபுலி வழங்கு மாரிரு ணடுநாட்
டனியை வருத [லத]ினு மஞ்சுது
மென்ன குவள்கொ ளுனே பன்னாட்
புணர்குறி வாய்த்த புரவுக்குர லேனற்
கிளிகடி பாடலு மொழிந்தனள்
அளிய டானேநின் னளியல திலளே.

—*அகம் - 117.

முருகற் செவ்வியொடு பகல்வரி னவ்வழி
கர(?ய)பிரவியற் கவ்வை யஞ்சுது
மிரவரி னதனினும் பெரிதஞ் சுதுமே.

—பொருளியல்.

வாரலிரு பொழுதும் வந்தால் மலைநாட
வேரல் புனைதிருத்தோள் மெல்லியலாள்—சூரல்
வழியிடையூ றஞ்சு மிரவெலா மன்ன
பழியிடையூ றஞ்சும் பகல்.

—களவித்தெளிவு.

தன்னுட் கையாறெய்திடு கிளவி யென்பது தலைமகள் தனதாற்றாமையை, 'எம்போல்வா ருளரோ' எனத் திங்கண்மேலும் அன்னத்தின்மேலும் கடலின்மேலும் வைத்துச் சொல்லுதல். அவற்றுள் திங்கண்மேல் வைத்துச் சொல்லுதற்குச் செய்யுள் வருமாறு:—

[சூழ்
விண்டலை யாவர்க்கும் வேந்தர்வண் டில்லைமெல் லங்கழி
கண்டலை யேகரி யாக்கன்னிப் புன்னைக் கலந்தகள்வர்
கண்டிலையேவரக் கங்குலெல் லாமங்குல் வாய்விளக்கும்
மண்டில மேபணி யாய்தமி யேற்கொரு வாசகமே.

—திருக்கோவை - 177.

[அன்னத்தின்மேல் வைத்துச் சொல்லுதற்குச் செய்யுள்:—]

மின்கண் படாவடி யேனொடு மாறன்விண் டார்முனைமேல்
மன்கண் படாத மயங்கிரு ளுண்மலி நீர்த்துறைவர்க்
கென்கண் படாத நிலைமைசொல் லாதிளஞ் சேவறழீஇத்
தன்கிண் படாநின்ற வன்னத்த தாயிற்ற தகவின்மையே.

—பாண்டிக்கோவை.

பறைவா யொலியோதம் பந்த ரு[க]ளுந்
துறைசேர் சிறுகுடியார் துஞ்சினுந் துஞ்சாய்
இறையின் மருண்மாலை யெம்மேபோ னீத்த
துறைவ னுடையையோ நீவாழி நாராய்.

—பழம்பாட்டு.

கடலொடு கவல லென்பது முன்னர்த் திங்கண்மேலு மன்னத்தின்மேலும் வைத்துச் சொல்லினளாய்ப் பின்பு கடன்மேல் வைத்துச் சொல்லுதல். அதற்குச் செய்யுள் வருமாறு:—

பூங்கணை வேளைப் பொடியாய் விழவிழித் தோன்புலியூ
ரோங்கணை மேவிப் புரண்டு விழுந்தெழுந் தோலமிட்டுத்
தீங்கணை[ந்] தோரல்லுந் தேறாய் கலங்கிச் செறிகடலே
யாங்கணைந் தோர்நின்னையுமுள ரோசென் றகன்றவரே.

—திருக்கோவை - 179.

தன்போற் சினத்துரு மேந்திய
கோன்கன்னித் தாதுறையும்
பொன்போன் மலர்புன்னைக் கானலு
நோக்கிப் புலம்புகொண்ட
வென்போ லிரவினெல் லாந்துயி
லாதுநின் றேங்குதியா
லன்போ டொருவற் கறிவழிந்
தாயோ வலைகடலே.

—பாண்டிக்கோவை.

ஆரணங் குற்றனை கடலே பூழியர்
சிறுதலை வெள்ளைத் தோடுபரந் தன்ன
மீனார் குருகின் கானலம் பெருந்துறை
வெள்விரி தாழைக் கைதலை
நள்ளென் கங்குலுங் கேட்குநங் குரலே.

—குறுந்தொகை ?

உன்னையு நீத்தகன்றா ருண்டோ வுடல்கருகிப்
புன்னை கமழும் பெ[ா]ருகடலே-யென்னைப்போல்
நெஞ்சா குலம்பெருகி நீயு மிரவெல்லாந்
துஞ்சாத தென்கொலோ சொல்லு.

—களவித்தெளிவு.

ஆற்றாமை கூறலென்பது தலைமகள் தனதாற்றாமை தலைமகற்குச் சொல்லி வரைவு கடாதல். அதற்குச் செய்யுள் வருமாறு:—

வளருங் கறியறி யாமந்தி தின்றுமம் மார்க்கிடமாய்த்
தளருந் தடவரைத் தண்சிலம் பாதன தங்கமெங்கும்
விளரும் விழுமெழும் விம்மும் மெலியும்வெண் மா
[மதிநின்
றொளிருஞ் சடைமுடி யோன்புலி யூரன்ன வொண்
[ணுதலே.

—திருக்கோவை - 193.

ஐய வாழியோ வைவா யேனப்
புன்றலை மடப்பிடி புலியென [ெ]வரூஉம்
பொன்மருள் வேங்கை யெம்மூர் போல
ஆடவர்ப் பிரிந்தோர்க் கலைக்கும்
வாடையு முளதோநின் பெருங்கன் னாட்டே.

—சிற்றெட்டகம்.

உள்ளத் தவலம் பெருக வொளிவேலோ
யெள்ளத் துணிந்த விருண்மாலை—வெள்ளத்துத்
தண்டா ரகலம் தழூஉப்புணையா நீநல்கி
லுண்டாமென் றோழிக் குயிர்.

—வெண்பாமாலை 12, இருபாற் - 4.

பந்தி யிளமிளகு பாராதே தின்றிளைய
மந்தி தளரு மலைநாட—முந்தருவி
சோர வரிநெடுங்கண் சுற்றும் பனிவாடை
யீர மெலிவா ளிவள்.

—களவித்தெளிவு.

வரைவது கிளத்த லென்பது இரவுக்குறி வந்தொழுகுந் தலைமகற்குத் தலைமகளுந் தோழியு மாற்றாத் தன்மையராய் வரைவுபயக்கச் சொல்லுதல். அதற்குச் செய்யுள்:-

பற்றொன் றில் லார்பற்றுந் தில்லைப்
பரன்பரங் குன்றினின்ற
புற்றொன் றரவன் புதல்வ
னெனநீ புகுந்துநின்றால்
மற்றுன்று மாமல ரிட்டுன்னை
வாழ்த்திவந் தித்தலன்றி
மற்றொன்று சிந்திப்ப ரேல்வல்ல
ளோமங்கை வாழ்வகையே.

—திருக்கோவை - 178.

நெய்நின்ற வேனெடுமாறனெங் கோனந்த ணேரியென்னு
மைநின்ற குன்றச் சிறுகுடி நீரைய வந்துநின்றாற்
கைநின்று கூப்பிவரையுறை தெய்வமென் றாதுகண்டார்
மெய்நின் றுணர்வ ரெனினுய்யுமோமற்றிவ் வேந்திழையே.

—பாண்டிக்கோவை.

* 'நற்றிணை' யென்பது தொன்னூல்-நிலயப் பிரதி.

கந்த னெனநீ கதிர்வேல் வலனேந்திச்
செந்தினைசூழ் குன்றச் சிறுகுடிவாய்—வந்தருளி
நின்று விறவுளர்கள் மெய்யுணரி னேரிழைக்கு
நன்றாத லுண்டோ நவில்.

—பழம்பாட்டு.

குறிப்புரை யென்பது இரவுக்குறிக்கட் டலைமகன் சிறைப்புறத்தா னாவதுணர்ந்து [அன்னை] என்னைக் குறித்து நோக்கினாளெனப் படைத்துத் தோழி தலைமகட்குச் சொல்லுதல். அதற்குச் செய்யுள் வருமாறு :—

விண்ணுஞ் செலவறி யாவெறி யார்கழல் வீழ்சடைத்தீ
வண்ணன் சிவன்றில்லை மல்லெழிற் கான லரையிரவி
லண்ணன் மணிநெடுந் தேர்வந்த துண்டா மெனச்சிறிது
கண்ணுஞ் சிவந்தன்னை யென்னையு நோக்கினள் கார்
[மயிலே.

—திருக்கோவை - 256.

அன்னாய்[நெருநல்] நிகழ்ந்தது
கேள்யல் வேந்திறைஞ்சும்
பொன்னார் கழனெடு மாறன்
குமரியம் பூந்துறைவாய்
மின்னார் மணிநெடுந் தேர்கங்குல்
வந்தொன்று மீண்டதுண்டா
லென்னா முகஞ்சிவந் தென்னையு
நோக்கினளெம்மனையே

— பாண்டிக்கோவை.

இல்லதுரைத்த லென்பது இவ்வகை வந்தொழுகுந் தலைமகற்குத் தோழியில்லதுமொழிந்து வரைவுகடாதல். அதற்குச் செய்யுள் வருமாறு :—

வான்றோய் பொழிலெழின் மாங்கனி
மந்தியின் வாய்க்கடுவன்
றேன்றோய்த் தருத்தி மகிழ்வகண்
டாள்திரு நீண்முடிமேல்
மீன்றோய் புனற்பெண்ணை வைத்துமை
யாளையு மேனிவைத்தான்
வான்றோய் மதிற்றில்லை மாநகர்
போலும் வரிவளையே.

—திருக்கோவை - 257.

பண்ணிவர் சொல்லிகண் டாலெண[ன்]னற் பாழிப் பகை
[தணித்த
மண்ணிவர் சீர்மன்னன் வாலெணடுமாறன் மலையமென்னும்
விண்ணிவர் குன்றத் தருவிசென் றாடியொர் வேங்கை
[யின்கீழ்க்
கண்ணிவர் காதற் பிடியொடு நின்ற கருங்களிறே.

—பாண்டிக்கோவை.

மழைகெழு சிலம்பி னருவி (ெ)யாடு
மழைமத களிறொடு பிடிகண்
டுழைகெழு நோக்கி யுள்ளினள் பெரிதே.

—பொருளியல்.

இவையெல்லாம்,

'காம மிக்க கழிபடர் கிளவியுங்
காப்புச் சிறைமிக்க கையறு கிளவியு
மாறுபார்த் துற்ற வச்சக் கிளவியு
[மிரவினும் பகலினு நீவரு கென்றலும்
கிழவோன் றன்னை வார லென்றலும்
தன்னுட் கையா றெய்திடு கிளவியு
மன்ன மரபிற் பிறவுந் தொகைஇத்
தன்னை யழிந்த கிளவி] யெல்லாம்
வரைதல் வேட்கைப் பொருள வென்ப'-இறை-30.

என்னுஞ் சூத்திரத்துட் கண்டுகொள்க

அலரறிவுறுத்த லென்பது தலைமகளது ஆற்றாமை யலராயிற்றெனத் தோழி யுரைத்தல். அதற்குச் செய்யுள் வருமாறு :—

அலரா யிரந்தந்து வந்தித்து மாலா யிரங்கரத்தா
லலரார் கழல்வழி பாடுசெய் தோற்கள் வில்லொளிக
ளலரா விருக்கும் படி(?டை) கொடுத் தோன்றில்லை
[யானருள்போன்
றலராய் விளைகின்ற தம்பல்கைம் மிக்கைய மெய்யருளே.

—திருக்கோவை - 180.

பலரா வெதிர்நின்று பாழிப்பட் டார்தங்கள் பையகிணம்
புலராவசும்புடை வேன்மன்னன்வேம்பொடுபோந்தணிந்த
மலரா மணிமுடி மான்றேர் வரோதயன் வஞ்சியன்னாட்
கலராய் விளைகின்ற தாலண்ண லார்செய்த வாரருளே.

—பாண்டிக்கோவை.

அறிந்தோ ரறனில ரென்றல் சிறந்த
இன்னுயிர்க் கழியினு நனியின் னாதே
புன்னையங் கானற் புணர்[குறி] வாய்த்த
மின்னே ரோதியென் றோழிக் கன்றோ
படுமணி யானைப் பசும்பூட் சோழர்
கொடிநுடங்கு மறுகி னார்க்காட் டாங்கட்
கள்ளுடைக் கடவிற் புள்ளொலித் தோவாத்
தேர்வழங்கு தெருவி னன்ன
கவ்வை யாகின்ற தையநின் னருளே.

—நற்றிணை - 227.

நிலவோ ரன்ன வெண்மணற் பாக்கத்து
மலரேர் கூந்தன் மடந்தைக்
கலரா கின்ற தையநின் னருளே.

—பொருளியல்.

அம்பல் பெருகி யலரான தல்லிதொறுந்
தும்பி முரலுஞ் சுரிகூந்தற்—கொம்பனைய
பண்ணாரு மென்சொல்லி பால்வந்து பல்காலும்
அண்ணாநின் செய்யு மருள்.

—களவித்தெளிவு.

அயன்மண முரைத்த லென்பது தலைமகற்குத் தோழி படைத்துமொழிந்து பிறருங் காப்பணியக் கருதுவரென்னும். அதற்குச் செய்யுள்:—

மணியக் கணியு மரனஞ்ச மஞ்சி மறுகிவிண்ணோர்
பணியக் கருணை தரும்பரன் றில்லையன் னாடிறத்துத்
துணியக் கருதுவ தின்றே துணிதுறை வாநிறைபொ
னணியக் கருதுகின் றார்பலர் [மேன்]மே லயலவரே.

—திருக்கோவை - 195.

நீரணி வேலி நெடுங்களத் தொன்னார் நிணமளைந்த
போரணி வேன்மன்னன் கன்னியன் னாடன்னைப்பொன்
[னணிவான்
காரணி வார்முர சார்ப்பப் பிற[ரு]ங் கருதிவந்தார்
வாரணி பூங்கழ லண்ணலென் னோநீ வலிக்கின்றதே.

—பாண்டிக்கோவை.

அணிகொணர்ந் தனரே யயலோ ரண்ணல்
துணிவுறு செய்தி யாதுகொல்
மணிபுரை கூந்தன் மடந்தைதன் வயினே.

— பொருளியல்.

பொன்னிதழிற் பைந்தாதும் போதும் புறம்புதைத்த
வின்னறல்போ லேழை யிருங்கூந்தல்—பொன்னணியுந்
தேன்சூழுந் தார்க்கண்டன் றெவ்வர் திகைத்தன்ப
யான்சூழ வுண்டோ வினி.

—கண்டனலங்காரம்.

மணமுரசறைதலென்பதுஇவ்வகைபடைத்துமொழிந்த தோழி நாளை மணமுரசறையுமெனச் சொல்லுதல். அதற்குச் செய்யுள்:—

பாப்பணி வோன்றில்லைப் பல்பூ மருவுசில் லோதியைநற்
காப்பணிந் தார்பொன் னணிவா ரினிகமழ் பூந்துறைவ
கோப்பணிவான்றோய் கொடிமுன்றினின்றிவை யோகு
மாப்பணி லங்கள் முழங்கத் தழங்கு மணமுரசே. [முமி

—திருக்கோவை - 196.

வேலைத் தொலைத்தகணேழை திறத்தின்று விண்ணுரிஞ்சு
சோலைச் சிலம்ப துணியொன்று மின்போற் சுடருமுத்த
மாலைக் குடைமன்னன் வாலெணடு மாறன்வண் கூடலின்
[வாய்க்
காலைத் திருமண முற்றத் தியம்புங் கடிமுரசே.

—பாண்டிக்கோவை.

அணிவ ரயலார்பொன் னாங்கதனுக் கீங்குத்
துணிவதனை யின்றே துணிநீ—பணிகொ
ளரவறையு மல்குலாட் கையனே நாளை
முரசறையு நங்கடைவாய் முன்

—பழம்பாட்டு.

பரிசங் கிளத்த லென்பது இவ்வகை மொழிந்த பாங்கிக்குத் தலைமகன் என் செயற்பாலதென்னும்: அதற்குத் தோழி செல்லுதல். அதற்குச் செய்யுள்:—

எலும்பா லணிபிறை யம்பலத் தோனெல்லை செல்குறு
நலம்பா வியமுற்று நல்கினுங் கல்வரை நாடரம்ம [வோர்
சிலம்பா வடிக்கண்ணி சிற்றிடைக் கேநமர் செப்பலொட்
கலம்பா வியமுலை யின்விலை யென்னீ கருதுவதே. [டார்

—திருக்கோவை - 197.

# யாப்பிலக்கணம்

செய்யுள்—கலிப்பா

[914-வது பக்கத் தொடர்ச்சி]

அகவலோசையால் ஆசிரியமும், செப்பலோசையால் வெள்ளையும், துள்ளலோசையால் கலியும் அமைவனவாக, தூங்கலோசையால் அமைவது வஞ்சி. ஓசைக்குப் பெரும்பான்மை ஆதாரமாயிருப்பது தளை. தூங்கலோசையை விளைவிப்பது வஞ்சித்தளை. வஞ்சியுரிச்சீ ரெனப்படும், தேமாங்கனி புளிமாங்கனி கருவிளங்கனி கூவிளங்கனி என்னும் நான்கு கனிச்சீர்களில் ஒன்றேனும், அல்லது நிரையசையை ஈற்றிலுடைய நாலசைச் சீர்கள் எட்டிலொன்றேனும் நிலைச்சீராய் இருந்து மற்றச்சீர்கள் தொடர நடப்பது வஞ்சித்தளையாகும். வருஞ்சீர்முதலிலும் நிரையசை இருக்குமாயின் ஒன்றியவஞ்சித்தளையும், நேரசை இருக்குமாயின் ஒன்றாத வஞ்சித்தளையும் ஆகும்என்பதும் முன்னரே கற்றிருக்கின்றோம் (பக்கம் 251).

வஞ்சித்தளையால் விளைகின்ற தூங்கலோசை, ஏந்திசைத் தூங்கல் அகவற்றூங்கல் பிரிந்திசைத் தூங்கல் என மூன்றுவகைப்படும் என்பதையு முன்னரே கூறியிருக்கின்றோம் (பக்கம் 535). பெரும்பாலும் ஒன்றிய வஞ்சித்தளையால் நிகழும் வஞ்சிப்பாவில் ஏந்திசைத் தூங்கலோசையும், பெரும்பாலும் ஒன்றாத வஞ்சித்தளையால்நிகழும் வஞ்சிப்பாவில் அகவற்றூங்கலோசையும், இருவகை வஞ்சித்தளைகளும் மற்றத்தளைகளும் விரவிநிகழும் வஞ்சிப்பாவில் பிரிந்திசைத் தூங்கலோசையும் விளையும். விரைவும் வன்மையுமின்றி மெல்ல ஒழுகும் ஓசை தூங்கலோசையாகு மென்பதை அதன்பெயரே குறித்து நிற்கின்றது.

தூங்கலோசைக்கு இடனாகிய வஞ்சிப்பாவில் பெரும்பாலும் வஞ்சியுரிச்சீர் எனப்படும் நிரையீற்று மூவசைச் சீர்களும், நாலசைச்சீர்களும் வரும். இத்தகைய சீர்கள் இரண்டு கொண்ட குறளடிகளாலேனும், மூன்று கொண்ட சிந்தடிகளாலேனும் வஞ்சிப்பாக்கள் நடக்கும். அளவடி நெடிலடி முதலியன மிகவும் அருகியன்றி வஞ்சிப்பாக்களில் வாரா. குறளும் சிந்தும் தவிர மற்ற அடிகளை ஏற்காமல் அவைகளை வஞ்சித்துநிற்றலால்இப்பா, வஞ்சிப்பா என்னும்பெயர் பெற்றதெனக் கருதுவார் சிலர். வஞ்சிக் கொடிபோல் நேர்ந்து நிற்றலால் இப்பாவிற்கு வஞ்சியெனும் பெயர் வந்ததென்பாரும் உளர். இத்தகைய சீரும் தளையும் அடியும் ஓசையும் உடையதாகிய வஞ்சிப்பா தனிச்சொல்லும் ஆசிரியச் சுரிதகமும் பெற்று நடக்கும். கலிப்பாவில் வருவதுபோல் வஞ்சிப்பாவில் வெள்ளைச் சுரிதகம் வாராது.

> வினைத்திண்பகை விழச்செற்றவன்
> வனப்பங்கய மலர்த்தாளிணை
> நினைத்தன்பொடு தொழுதேத்தினர்
> நாளும்
> மயலார் நாற்கதி மருவார்
> பெயரா மேற்கதி பெருகுவர் விரைந்தே.

இதனில், நாளும் என்பது தனிச்சொல். அதன்பின் வரும் இரண்டடி ஆசிரியச் சுரிதகம். முதல் மூன்று அடிகளும், கனிச்சீர்களும் ஒன்றிய வஞ்சித்தளையும்பெற்றுக் குறளடிகளால் ஏந்திசைத் தூங்கலோசையோடு நடக்கும் வஞ்சி ஆகும் செய்யுளில் கூறவரும் பொருளை எடுத்துத்தரும் குறிப்பு இல்லையாதலின், இதனைத் தனியுறுப்பாகத் தரவு என்று கலிப்பாவில் அழைப்பதுபோல் வஞ்சிப்பாவில்அழைக்கின்ற வழக்கமில்லை.

> வான்றோய்கதிர்த் திடற்றிகிரியை வலனேந்தியு
> மீன்றோய்மதி மிளிர்வலம்புரி யிடனேந்தியுங்
> கவுத்துவமணி வனமாலிகை கவின்மார்பினிற்
> பவுத்திரமுறு மலர்மாமகள் பயில்வாழ்வினின்
> மகரக்குழை தழைகாதினன் மணிமௌலியின்
> சிகரப்பஃ றலைசேர்வட மலைமேலுறை
> செல்வனை
> யனவர தமும்வரி யளிசெறி தளையவி
> ழினமலர் தூயிறைஞ் சினர்பாற்
> கனவினு முறுான்கொடுங் கணிச்சி யோனே.

இது, மூன்று சீர்களுடைய சிந்தடி வஞ்சிப்பா. தனிச்சொல்லும் ஆசிரியச் சுரிதகமும் பெற்றது. ஒன்றிய வஞ்சித்தளைகள் பெற்று ஏந்திசைத் தூங்கலோசை சிறப்பது காண்க.

> வானோர்தொழ வண்டாமரைத்
> தேனார்மலர் மேல்வந்தரு
> ளானவருள் கூறிவனைக்
> காணார்
> மலர்கொண் டேத்தி வணங்குநர்
> பலர்புகழ் முத்தி பெருகுவர் விரைந்தே.

இது, ஒன்றாத வஞ்சித்தளையால் வருவதால் அகவற்றூங்கலோசை அமையப்பெற்றிருக்கின்றது. குறளடி மூன்றும் தனிச்சொல்லும் இரண்டடி ஆசிரியச் சுரிதகமும் பெற்றுளது.

> பாலத்தஞ் செலவிவளொடு படுமாயி
> னீரவத்தை நடவேண்டா வினிநனியென
> நஞ்சிறு குறும்பிடை மூதெயிற்றியர்
> சிறந்துரைப்பத் தெறுகதிர் சென்றுறு
> மாங்கட் டெவிட்டனர் கொல்லோ
> எனவாங்கு
> நொதுமலர் வேண்டி நின்னொடு
> மதுகரமுற்ற வாடவர் தாமே.

இது சிந்தடிகளால் வந்த வஞ்சிப்பா. இத்னில் ஆசிரியத்தளை வெண்டளை கலித்தளை ஒன்றிய வஞ்சித்தளை ஒன்றாத வஞ்சித்தளை யாவும் விரவிப் பிரிந்திசைத் தூங்கலோசை சிறப்பது காண்க.

> அங்கண்வானத் தமரரசரும்
> வெங்களியானை வேல்வேந்தரும்
> வடிவார்கூந்தன் மங்கையரும்
> கடிமலரேந்திக் கதழ்ந்திறைஞ்சச்
> சிங்கஞ்சுமந்த மணியணைமிசை
> கொங்கிவரசோகின் கொழுநிழற்கீழ்ச்
> செழுநீர்ப்பவளத் திரள்காம்பின்
> முழுமதிபுரையு முக்குடைநீழல்
> வெங்கண்வினைப்பகை விளிவெய்தப்

பொன்புனைநெடுமதில் புடைவளைப்ப
வனந்தசதுட்டய மவைமெய்த
நனந்தலையுலமுட னவைநீங்க
மந்தமாருதம் மருங்கசைப்ப
வந்தாதுந்துமி நின்றியம்ப
இலங்குசாமரை எழுந்தலமர
நலங்கிளர்பூமழை நனிசொரிதர
இனிதிருந்து
அருணெறி நடாத்திய வாதிதன்
திருவடி பரவுதுஞ் சித்திபெறற் பொருட்டே.

இது நாலசைச் சீர்களெனும் பொதுச்சீர்கள்பலவும் விரவிவந்த குறளடி வஞ்சிப்பா.

இவ்வுதாரணங்களிற் காட்டிய வஞ்சிப்பாக்களெல்லாம் ஆசிரியச் சுரிதகத்தினாலேயே முடிந்திருப்பது காண்க. வெள்ளைச்சுரிதகம் வஞ்சியில் வாராது. வஞ்சிப்பாவினுள் ஆசிரியவடிகள் அருகி வருவது உண்டு.

வையமீன்ற மறைக்கிழவனும்
கெய்துழாய்மௌலிக் குணக்கொண்டலும்
தருவார்கீழற் றூர்வேந்தனும்
வரன்முறைதாழ்ந்து வாழ்த்திசைப்ப
மைதீருணர்வின் மழமுனிவனும்
பையரவரசும் பணிந்திறைஞ்ச
இமையம்பயந்த விளங்கொடியொடுந்
தபனியப்பொதுவிற் றிருவடிக்கீழ்ச்
சொல்லுவதொன்றிது சொலக்கேண்மதி
கமலலோசனன் கண்படுக்கு
மமளியைநின்மருங் காதரித்தனை
செங்கேழ்நறுநுதற் றிருமகளொடு
மங்கவ னுறைதரு மாழிச் சேக்கையைப்
புலிக்கான்முனிவரன் புதல்வனுக்கு
நலத்தருகருணையி னயந்தளித்தனை
அவன் அதனால்
பாயலு மமளியு மின்றி மன்றநின்
வாயிலி னெடுநாள் வைகின னன்னையோடு
மத்திரு மனையவற் களித்தநின்
மெய்த்தொழி லன்றே வீடுநல் குவதே.

இதனில் "மங்கவ னுறைதரு மாழிச் சேக்கையை" என்ன ஆசிரியவடி அருகி வந்திருத்தலைக் காண்க.

—•—*=*—•—

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்—11. குகப் படலம்.

[918-வது பக்கத் தொடர்ச்சி]

இடருங் கடந்த வேழைக் கைகயி.

உரைகுறுக நிமிர்கீர்த்திப் பாதனைப் பலபுகழ்ந்து

பொருவில் காதலோடும் குகன் அவனுக்கு அமைவன ஆற்றினான். ஆயினும் இஃதொரு விந்தையன்று என்பர் கம்பர். ஆரவனுக்கு அன்பிலாதார்? பரதனும் கரையிறந்த அன்பிற்குரியவன்; குகனும் கரையிறந்த அன்பு செய்யவல்லவன். இவ்விரண்டிற்கும் காரணமாதல் இருதிறத்தோர்தம் குணங்களின் மேன்மையே. முன்னரும் "நினைவருங் குணங்கொடன்றோஇராமன்மேல் நிமிர்ந்த காதல்" என வினவுகையில், இம்மை மறுமை முதலிய நலங்களை நயந்ததன்று குகன் செய்தகாதலென்பதைக் கம்பர்நினைவுபடுத்துகின்றார்.

இன்னதன் பின்னர்ப் பரதன் வேண்டியபடி குகன், முன் இராகவன் வைகிய பள்ளியைக் காட்டலும்,

பார்மிசைப் பதைத்து வீழ்ந்தான்
பருவரற் பரவை புக்கான்
வார்மணிப் புனலால் மண்ணை
மண்ணுநீ ராட்டுங் கண்ணான்

ஆகி, இராகவனை நினைத்து,

இயன்றதென் பொருட்டி னாலிவ்
விடருனக் கென்ற போழ்தும்
அயின்றனை கிழங்குங் காயும்
அமிர்தென வலிய புல்லில்
துயின்றனை யெனவு மாவி
துறந்திலென் சுடருங் காசு
குயின்றுயர் மகுடஞ் சூடுஞ்
செல்வமுங் கொள்வென் யானே

[என்பொருட்டு உனக்கு இந்தத் துன்பம் நேர்ந்தது, கிழங்கும் காயும் அமிர்தம் என எண்ணி உண்டாய்; வலிய புல்லிலே நித்திரை செய்தாய்; என்ற இவைகளையெல்லாம் அறிந்தும் யான் உயிர் போகாமல் நிற்கின்ற கொடியவனாகின்றேன். இனியென்ன, பிரகாசிக்கின்ற இரத்தினங்களிழைத்த உயர்ந்த கிரீடத்தைத் தரித்த அரசசெல்வத்தையும் யானே கவர்ந்துகொள்ளமாட்டேனோ,]

எனப்பரதன் தன்னையே கடிந்துரைத்துவருந்துவானாய், இலக்குமணன் 'அமர்ந்த இடம் யாதென' வினவுதலும் குகன்,

அல்லையாண் டமைந்த மேனி
யழகனு மவளுந் துஞ்ச
வில்லையூன் றியகை யோடும்
வெய்துயிர்ப் போடும் வீரன்
கல்லையாண் டுயர்ந்த தோளாய்
கண்கணீர் சொரியக் கங்குல்
எல்லைகாண் பளவு நின்றான்
இமைப்பிலன் நயன மென்றான்

[மலையொத்து உயர்ந்த தோள்களையுடையவனே, இருளையொத்த திருமேனி அழகுடைய இராமனுஞ் சீதையுந்துயில் கொள்ள, வீரனாகிய இலக்குவன், வில்லை ஊன்றிய கையோடும் பெருமூச்சோடும், கண்கள் நீர்சொரியப் பொழுது விடியும் வரையில் கண்கொட்டாமல் நின்றான்—என்றான்]

என்பத்தைக் கேட்ட மைந்த
னிராமனுக் கிளையா ரென்று
முன்பொத்த தோற்றத் தேனில்
யானென்று முடிவி லாத
துன்பத்துக் கேது வானே
னவனது துடைக்க நின்று
னன்பத்துக் கெல்லை யுண்டே
யழகிதென் னடிமை யென்றான்

[என்று குகன் கூறியதைக் கேட்ட பரதன், இராமனுக்குத் தம்பியர் என்று முன்பு ஒத்த பிறப்புடைய எங்களில் நான், இராமனது என்றும் முடிவில்லாத துன்பத்திற்குக் காரணமானேன். அவ் விலக்குமணனோ அத்துன்பத்தை நீக்க உடன் நின்றான். அவனது அன்புக்கு அளவேது—நான் செய்யும் அடிமையோ மிக அழகிது—என்றான்]

இன்னணம் பற்பல நினைந்நினைந்து துயர்கூர்ந்த பரதன், தம்மைக் கங்கையைக் கடத்தி இராமன்பால் போக்குதற் குதவுமாறு வேட்டுவக் குரிசிலை வேண்ட அவனும் அன்னதற்குரியன செய்யலுற்றான்.

நங்கையர் நடையின் அன்ன நாணுற செல்லின் நாவாய் பலபயப்பயவந்து, இருவினையென்ன அங்குமிங்கும் இழித்தி யேற்றத் தலைப்பட்டன. படையுளோரும் குதிரைகளும் தேர்களும் படகிற் செல்ல, வேழங்கள், கங்கைநங்கையின் முலைகளெனத் தம் கும்பங்கள் பொலிந்து யாற்றில் தோன்ற நீந்தியும், தவமுடைய முனிவரர் விசும்பினூடும் படர்தர,

இயல்வுறு செலவி னாவாயிருகையு மெயினர் தூண்டத்
துயல்வன துடுப்பு வீசுந் துவலைகண் மகளிர்மென் றா
சுயல்வுறு பரவை யல்கு லொளிபுறத் தளிப்ப வுள்ளத்
தயர்வுறு மதுகை மைந்தர்க் கயாவுயிர்ப் பளித்த தம்மா

[தகுந்தபடி செல்கின்ற படகுகளின் இருபக்கத்திலும் வேடர் தள்ளுவதால் அசைந்த துடுப்புக்களால் எறியப்படும் நீர்த்துளிகள் மாதர்களின் மெல்லிய ஆடையில் தங்கி மறைகின்ற பரந்த அல்குலினது ஒளியானது வெளித்தோன்ற அக்காட்சி வீரர்களுக்குச் சிரமபரிகாரமாயிற்று]

எனப் பரிகசிப்பாராய்க் கம்பர் அழுங்கிய உள்ளத்திற் கொருசிறிது கிளர்ச்சியூட்ட முயல்கின்றார். தன்னினிய காதலியைத் தேவருக்குடன்படுத்தி மணஞ் செய்விக்கத் தூதுசென்று மாலிகாஞ்சன மந்திரத்தால் தன்னுருத் தெரிதலின்றித் தமயந்தியின் கன்னிமாடப் பொழிலினூடேகுங்கால்,

*மலர்பயில் வாவிதோய் மாதர் நுண்துகில்*
*அலைபுனல் நனைதலும் அல்குல் தோன்றலால்*

அதனைக் காணலாகாதென்று கண்முகிழ்த்தேகிய கலைவலான் மெய்ம்மை நளனைப் போன்றவரும் சிற்சிலர் பரதனுடன் போந்திருந்த மதுகை வீரருள் இருந்திரா ரென் றெண்ணலரிது.

பரதனோடு குகனும் சத்துருக்கனும் சுமந்திரனும் தாயர் மூவரும் ஒரு நாவாயில் ஏறிச் சென்றனர். அப்பொழுது,

*சுற்றத்தார் தேவரொடுந் தொழநின்ற*
*கோசலையைத் தொழுது நோக்கிக்*
*கொற்றத்தார்க் குரிசிலிவ ராரென்று*
*குகன்வினவக் கோக்கள் வைகு*
*முற்றத்தான் முதற்றேவி மூன்றுலகு*
*மீன்றானை முன்னீன் றானைப்*
*பெற்றத்தாற் பெறுஞ்செல்வம் யான்பிறத்த*
*லாற்றுறந்த பெரியா ளென்றான்.*

[உறவினர்களும் தேவர்களும் வணங்குதற்குரிய கோசலையைநோக்கி, "வெற்றிமாலையையணிந்த வேந்தனே, இவர் ஆர்" என்று குகன் தொழுதுவினவ, பரதன், "அரசர்கள் காத்துநிற்கும் தலைவாயிலுடைய தசரதன் மூத்த மனைவி, மூன்று உலகும்படைத்த பிரம்மனை முதலில் படைத்த திருமாலைத் தான் மகனாகப் பெற்றதால் அடையவல்ல பாக்கியங்களை நான் பிறந்ததால் இழந்த பெருமாட்டி" என்றான்]

*என்றலுமே யடியின்மிசை நெடிதுவிழுந்*
*தழுவானை யிவன்யா ரென்று*
*கன்றுபிரி காராவின் றுயருடைய*
*கொடிவினவக் கழற்கான் மைந்த*
*னின்றுணைவ னிராகவனுக் கிலக்குவற்கு*
*மிளையவற்கு மெனக்கு மூத்தோன்*
*குன்றனைய திருநெடுந்தோட் குகனென்பா*
*னிந்நின்ற குரிசி லென்றான்*

[என்று பரதன் சொன்னதும், தன் பாதங்களில் நெடிது விழுந்தழும் குகனைக் குறித்து, கன்றுபிரிந்த பசுவைப்போல் வருந்தும் கோசலை, "இவன் யார்" என்று வினவ, வீரக்கழலணிந்த கால்களையுடைய பரதன், "இராமனுக்கு இனிய தோழன், இலக்குமணனுக்கும் சத்துருக்னனுக்கும் எனக்கும் தமையனுமவன். குன்றுபோன்ற அழகிய பெரிய தோள்களையுடைய இந்தப் பெருமகன் குகன் என்னும் பெயருடையவன்"—என்றான்.]

கேட்டனள் கோசலை; தனக்குரிய பெருமையோடும் மிகப்பரிந்து,

*நைவீர லீர்மைந்தீ ரினித்துயரா*
*லுடிறந்து காடு நோக்கி*
*மெய்வீரர் பெயர்ந்ததுவு நலமாயிற்*
*றுமன்றே விலங்கற் றிண்டோள்*
*கைவீரக் களிறனைய காளையிவன்*
*றன்னோடுங் கலந்து நீவிர்*
*ஐவீரு மொருவீரா யகலிடத்தை*
*நெடுங்கால மளித்தி ரென்றாள்.*

["மைந்தர்களே, இனி நீங்கள் துன்பத்தால் தளர வேண்டா. சத்தியபராக்கிரம முடையவர்களாகிய இராம இலக்குமணர்கள் நாட்டைவிட்டுக் காட்டிற்குச்சென்றதும் நல்லதே ஆயிற்று. இனி, மலைபோல் வலிய தோளையுடையவனும் துதிக்கையுடைய வீரம்மிகுந்த யானைபோன்றவனும் ஆகிய இந்த ஆண்மகனோடே கூடி நீங்கள் ஐவரும் ஒரு மனத்தினராய் விசாலமான இப்பூமியை வெகுகாலம் காப்பீர்"—என்றாள்]

அதன்பின்,

*அறந்தானே யென்கின்ற வயனின்று*
*டனைநோக்கி பைய வன்பி*
*னிறைந்தானை யுரையென்ன நெறிதிறம்பாத்*
*தன்மெய்யை நிற்ப தாக்கி*
*இறந்தான்றன் னிளந்தேவி யாவர்க்குந்*
*தொழுகுலமா மிராமன் பின்பு*
*பிறந்தானு முளனென்னப் பிரியாதான்*
*றனைப்பயந்த பெரியா ளென்றான்.*

[அறமே என்று சொல்லத்தக்கவளாய்க் கோசலையின் அருகில் நின்ற சுமித்திரையை நோக்கி, 'ஐயா அன்பின் நிறைந்த இவள் யார்என்று சொல்" எனக் குகன் கேட்க, பரதன், "ஒருபோதும் மாறாத தன் வாய்மையை நிலைக்க வைத்துத் தான் இறந்த தயரதன் இளையமனைவி, யாவரும் தொழுதற்குரிய குலதெய்வமாகிய இராமனுக்குத் தம்பியாகப் பின்பிறந்தவனும் ஒருவன் இருக்கின்றானென்னும்படி அவனைவிட்டுப் பிரியாத இலக்குமணனைப் பெற்ற பெருமையுடையவள் இவள்', என்று கூறினன்]

இனி எஞ்சியிருப்பவள் கைகேசி. அவள்யாரென்று குகன் கேட்பதும் மிகை. எனினும்,

*சுடுமயா னத்திடைத்தன் றுணையேகத்*
*தோன்றறுயர்க் கடலி னேகக்*
*கடுமையார் கானகத்துக்குக் கருணையார்*
*கலியேகக் கழற்கான் மாயன்*
*நெடுமையா லன்றளந்த வுலகெல்லாந்*
*தன்மனத்தே நினைந்து செய்யுங்*
*கொடுமையால ளந்தாளை யாரிவரென்*
*றுரைசெய்யக் குரிசில் கூறும்*

[தன் கணவன் சுட்டெரிக்கும் மயானம் அடையவும், தன் மகன் துயரக்கடலில் மூழ்கவும், கொடிய காட்டிற்குக் கருணைக்கடல் அனைய இராமன் செல்லவும்,—வீரக்கழல் அணிந்த திருமால் நீண்டு திருவிக்கிரமனாகி அளந்துகொண்ட உலகங்களையெல்லாம் தன் மனத்தில் நினைத்துச் செய்யும் கொடுமையால் அளவிட்ட கைகேசியை யாரென்று குகனுக்குத் தெரிவிப்பானாய்ப் பரதன் கூறுவான்]

இவ்வளவும் கம்பர் தம் கருத்தினால் உறுத்துரைத்த வசை யன்று. ஆசைபோய் வழிந்துகழிந்த மனத்தளாய்த் துயர்நெடுங் காதல் தூண்டப் போந்துள கைகேசியை இனிக் கம்பர் ஏசமாட்டார். அவள் முகத்தை நோக்குமளவிலேயே பரதன் மனத்தில் நிகழ்ந்த சீற்றத்தைக் கம்பர் சொற்களாக மாற்றித் தந்தாரல்லாது இப்பொறுப்பு இந் நாடகக்கலைஞரைச் சார்ந்ததாகாது. இவ்வண்ணங் கதங்கொண்டு கொதிக்கும் பரதன்,

*படரெலாம் படைத்தாளைப் பழிவளர்க்குஞ்*
*செவிலியைத்தன் பாழ்த்த பாவிக்*
*குடரிலே நெடுங்காலங் கிடந்ததற்கு*
*முயிர்ப்பாரங் குறைந்து தேய*
*உடலெலா முயிரில்லா வெனத்தோன்று*
*முலகத்தே யொருத்தி யன்றே*
*இடரிலா முகத்தாளை யறிந்திலையே*
*லிந்நின்றா ளென்னை யீன்றாள்*

[துன்பங்களையெல்லாம் உண்டாக்கினவளும், பழியை உலகத்திற்கு வளர்த்துவைக்கும் செவிலித்தாய் போன்றவளும், தன் பாழும் பாவி வயிற்றிலே வெகுநாள்கிடந்த எனக்கும் உயிர்ப்பாரம் தேய்ந்துபோகச் செய்தவளும், இவ்வுலகிலுள்ள உடல்களெல்லாம் உயிரற்றனபோல் தோன்றும்படி புரிந்தவளும், இத்தகைய உலகில் யாதும் துன்பக் குறிப்பில்லாத முகத்தையுடையவளும் ஆகிய இவளை நீயறியாயாயின், என்னைப் பெற்றவள் இவள்தான் ]

பாவம் அக்கைகேயி. இடரிலா முகத்தாளாய் நிற்கின்றாளெனப் பரதன் அவளைச் சொற்களால் சுடும்போது இப்பொழுது இரக்கமே எம்மனத்தில் எழுகின்றது. கூனியின் சூழ்ச்சிக்கு இரையாய பேதைமையால் தான் உலகனைத்திற்கும் இழைத்த பேரிடரை நோக்கி உன்மத்தம் கொண்டாள்போல் உணர்வற்றிருப்பாளை இன்னணம் இழித்துரைக்கின்றான் பழிக்கஞ்சியும் இராமனுக் கிழைத்த தீங்கிற் காற்றாமலும் மதி மயங்கி நின்ற பரதன். முகக் குறிப்பின்

உண்மையைக் குகனே தெரிந்துகொண்டான்போலும் ஆதலின்,

என்னக் கேட்டவ் விரக்க மிலாளையுந்
தன்னற் கையின் வணங்கினன் ருயென
அன்னப் பேடை சிறையில தாய்க்கரை
துன்னிற் றென்னவும் வந்தது தோணியே.

[இரக்கமற்றவள் என்று சொல்லக்கேட்ட அக்கைகேசியையும் தன் தாயெனக் கருதித் தன் நல்ல கைகளால் கும்பிட்டான். பெண்ணன்னம் சிறையில்லாததாய் நீந்திக் கரை சேர்ந்த தென்னத் தோணியும் சேர்ந்தது]

கைகேயின் முகம் இடர்க்குறிப்புக் காட்டாமையின் உண்மைக் காரணம் தெரிந்ததுமன்றி, இராம இலக்குமணபரதர்தம் தோழமையைப் பெறுதற்குத வியவளிவளல்லளோ வென்னும் நன்றியினுல் தாயெனக் குகனவளைத் தொழுதவனுமாதல் கூடும்.

# வர்த்தமானம்

19-வது வயதுள்ள பெக்கி சாலமன் என்னும் ஆங்கிலச் சிறுமி இங்கிலாந்திலிருந்து விமானத்தில் புறப்பட்டு ஒரே ஓட்டமாக ஆப்பிரிக்கா சென்றனள் என்றும் இதுவரை இவ்வளவு சிறு வயதுடைய மாது எவரும் இவ்வளவு தூரம் பிரயாணம் செய்ததில்லை என்றும் தெரிகின்றது.

***

சோவியத்து ருஷ்யாவில் பெட்ரோல் எண்ணெய் மிகவும் குறைவான விலைக்கு விற்கின்றது. ஒரு காலன் விலை மூன்று பென்ஸ். அதாவது மூன்று அணு. அரசாங்கத்தாரே வியாபாரம் கைத்தொழில் முதலியனவற்றை நேரே கவனிப்பதால் இப்படி விலை விகிதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

***

இங்கிலாந்தில் 56 வயதுள்ள பிராங்ஸ் மில்லர் என்பவரும், 22 வயதுள்ள ருத் ஸ்மித் என்னும் மாதும் 1473 மணி நேரம் விடாது நடனம் புரிந்தனரென்றும், இதுவரை எவரும் அவ்வளவு மணி நேரம் ஆடியதில்லை யென்றும் அதற்காக அவர்களுக்கு ஆயிரம் பொன் பரிசாகக் கொடுக்கப்பட்டதென்றும் தெரிகின்றது.

***

வட்டமேஜை மஹாநாட்டை இன்னும் முடிவாகக் கூறுவதற்கில்லை என்றும் இந்தியருக்குத் திருப்தி ஏற்படக்கூடிய வழியில் பிரிட்டிஷ் ராஜதந்திரிகளும் அரசாங்கத்தினரும் காரியங்களைச் செய்யாவிடில் தாம் ஒத்துழையாமை பகிஷ்காரம் முதலிய இயக்கத்தை நடத்தநேரும் என்றும் காந்தியடிகள் இங்கிலாந்தில் கூறியுள்ளார். மிதவாதிகளான ஸ்ரீமான் V. S. ஸ்ரீனிவாச சாஸ்திரியார் அவர்களும் டாக்டர் சாப்ருவும், பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் முற்போக்கான முறையில் காரியங்களைச் செய்யவில்லை என்று அபிப்பிராயப் படுகின்றனர்.

***

ஆலயத்திருப்பணி :— திருக்குடைவாசலுக்குத் தெற்கே நான்கு மைல் தூரத்தில் திருக்கொள்ளம்பூதூர் என்ற வொரு க்ஷேத்திரம் இருக்கின்றது. அக்ஷேத்திரம் பாடல்பெற்ற ஸ்தலம். அங்கு ஸ்ரீ சௌந்தர நாயகி சமேதராய் ஸ்ரீவில்வாரண்யேச்வரர் கோயில் கொண்டிருக்கின்றார். ஆலயம் ஜீரணமடைந்தபடியால் திருப்பணி செய்யவேண்டியிருந்தது. தனவணிகச் செல்வர் சாந்துப்பட்டி பெ. ராம. இராமன் செட்டியார் அவர்கள் இத்திருப்பணி கைங்கரியத்தை ஏற்றுள்ளார்கள். இப்பொழுது 150 பேர் திருப்பணி வேலையில் அமர்ந்திருக்கின்றனர். ஒன்றிரண்டாண்டுகளில் வேலை முடிவாகிக் கும்பாபிஷேகம் நடக்கும் என்று செட்டிநாட்டு நண்பர் ஒருவர் எழுதுகின்றார்.

ஜீவகாருண்யம்:—சென்னை ஜீவகாருண்ய சங்கத் தலைவரான ஜஸ்டிஸ் C. N. P. ஜாக்ஸன் விடுத்துள்ள சுற்றுக்கடிதம் வருமாறு :—

"சென்னை ஜீவகாருண்ய சங்கத்தார் கால்நடைகளுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை அகற்ற மிகவும் முயன்று வருகின்றார்கள் என்பதையும் அச்சங்கத்தார் முயற்சியால் ஜீவகாருண்ய இயக்கம் வளரலானதையும் எல்லோரும் அறிவர். குதிரைகளும் வண்டி மாடுகளும் சரியாக சம்ரக்ஷிக்கப்படுவதில்லை. கழுத்துப் புண்ணுடன் மாடுகள் செக்கிலும் வண்டிகளிலும் பூட்டப்படுகின்றன. கன்றுக் குட்டிகள் பட்டினி போடப்படுகின்றன. இப்படி நடப்பதைத் தடுக்க இச்சங்கத்தார் மிகவும் முயல்கின்றனர். வருடம் ஒன்றிற்கு 2000 பேர்கள்மீது வழக்குத் தொடரப்படுகின்றது. ஆனுல் மதச்சடங்கு என்ற பேரால் கோரமான பலிகள் நடக்கின்றன. அவைகளைத் தடுக்கச் சட்டத்தால் இயலாது. பொதுஜனங்களின் முயற்சியால்தான் இப்பலிகள் நிற்கவேண்டும். எனவே ஜீவகாருண்ய பிரசாரம் விரைவாக நடக்கவேண்டும்.

***

ஜெனரல் ஸ்மட்ஸின் அபிப்பிராயம் :—இந்திய அரசியல் நிர்ணய விஷயமாய் ஜெனரல் ஸ்மாட்ஸ் கூறிய அபிப்பிராயம் வருமாறு :—தற்கால நிலையைப்பற்றிச் சிந்திக்குங்கால் இந்திய அரசியல் முன்னேற்றத்தை நாடியவர்களாய் பிரிட்டிஷ் இராஜதந்திரிகள் காரியங்களைச்செய்யவேண்டும். காந்தியடிகளுடன் நான்பேசிக் கொண்டிருந்ததிலிருந்து அவர் நியாயமான எச் சமரச முடிவையும் ஏற்கத் தயாராயிருக்கின்றார் என்று தெரிகின்றது. இந்தியா விஷயத்தில் காந்தியின் நட்பும் கூட்டுறவும் இருக்குமேல் பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்கு எக்காரியத்திலும் சௌகரியமாயிருக்கும். காந்தியடிகள் வார்த்தையை ஜனங்கள் ஏற்றுக்கொள்வர். இச்சமயத்தைக் கைவிடாது முற்போக்கான முறையில் பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் காரியம் செய்வார்களாயின் அரசியல் அமைதி சீக்கிரத்தில் ஏற்படும்.

"ஆயுதபலத்தை இனியும் நம்பிக்கொண்டிருப்பது அறிவுடையதாகாது. எனவே சமாதான முறையில் இரு சார்பினரும் சிறிது விட்டுக்கொடுத்து ஒரு முடிவைச் செய்துகொள்ள வேண்டும். வகுப்புப் பிரச்னை யென்று கூறுவோர் கூற்று ஒன்று மில்லாமைக்காகச் சொல்லும் சாக்கேயாகும்.

"இந்தியாவும் பிரிட்டனும் நட்புடனும் ஒருவருக்கு ஒருவர் துணையாகவும் இருந்து வாழ்வதற்கானபடி நிலைமை ஏற்படும் பொருட்டு நடக்கும் ஏற்பாடுகளைப் பிரிட்டிஷ் மஹாஜனங்கள் ஆதரிக்கவேண்டுமென்பதே எனது விருப்பம். காந்தியின் கூட்டுறவு இருக்கும்பொழுதே ஒரு ஏற்பாடு நடந்துவிடவேண்டும்.

***

—:வைத்திய ரத்ன:—
பண்டிட். D. கோபாலாசார்லு அவர்களின்
ESTD 1898
ஜீவாமிருதம்



பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப் போக்கி, தேக பலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது.
எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0
ஆயுர்வேதாஸ்ரமம்
தபாற் பெட்டி. 287. மதறாஸ்.
கேட்லாக் இனாம்

## அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ. 18—0—0
காரநேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0
தமிழ்-தமிழ்-ஆங்கிலம்
வி. விச்வநாத பிள்ளை இயற்றியது 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

## 1930-வது வால்யூம்

பயிண்டு செய்தும் செய்யாமலும் கிடைக்கும். சில பிரதிகளே இருக்கின்றன. வேண்டுவோர் சீக்கிரத்தில் பெறல் நலம்.

குறுந்தொகை என்னும் சிறந்த சங்கநூல் உரையுடனும், ...சேடக் குறிப்புகளுடனும் இவ்விதழ்களில் பதி...க்கப் பெற்றிருக்கின்றன.

| விலை உள்நா | | விலை வெளிநாடு |
|---|---|---|
| ,, 9-0-0 | ...ரலெதர் பயிண்டு | ,, 10-8-0 |
| ,, 8-8-0 | காலிகோ | ,, 10-0-0 |
| ,, 7-8-0 | (பயிண்டு செய்யாதது) | 9-0-0 |

ரயிலில் அனுப்பப் புத்தகமொன்றிற்கு 6 அணுவாகும். தபாலில் அனுப்பவேண்டுமானால் உள்நாடுகளுக்கு ரூ. 2, வெளிநாடுகளுக்கு ரூ. 3 விலையுடன் சேர்த்து அனுப்பவேண்டும்.

கலா நிலயம்,
புரசை, சென்னை.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்
:: மகா பாரதம் தமிழ் வசனம் ::
திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.
(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வம் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.
பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை, வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

ஏற்படுத்தியது] நாஷனல் [1906
இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ், 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.
1906-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்டது.
ஸ்டாக்குகளிலும், பாண்டுகளிலும் அவ்வப்பொழுது ஏற்படும் மாறுதல்களில்லாது லைப் இன்ஷூரன்ஸ் நிரந்தர சேமிப்பாக விருக்கின்றது.
பிள்ளையின் கல்விச் சேமிப்பு வயோதிகச் சேமிப்பு பெண்ணின் வரதக்ஷிணை குடும்பச் சேமிப்பு இவைகளிற்கு இன்ஷியூர் செய்யுங்கள்.
குறைந்த வீகிதப் பிரீமியங்கள்—தாராள நிபந்தனைகளை இந்தியரால் மட்டும் நிர்வகிக்கப்பட்டுவரும் வலிமை பெற்ற கம்பெனி
மொத்த ஜேஜி ... ரூ. 1,72,00,...க்குமேல்
செலுத்தப்பட்டுள்ள உரிமைகளின் மொத்தம் ,86,00,00
திருப்திகரமான வீதப்படி போனஸ் வெளியிடப்படுகின்றது.
ஏஜன்ஸி நிபந்தனைகளுக் கெழுதுவது உங்களுக்கு லாபகரமானது.
T. அனந்தாச்சாரி, B. A. பிராஞ்சு காரியதரிசி,
113, அரமனைக்காரத்தெரு, ஜார்ஜ டவுன், மதராஸ்.
R. G. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்

நெருப்பு, இதர விபத்துகள் சம்பந்தமானவற்றை நாஷனல் நெருப்பு & ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டார் கவனித்து வருகின்றனர்.
ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்., 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.
டி. அனந்தாச்சாரி, பி. ஏ, பிராஞ்சு காரியதரிசி,
113, அரமனைக்காரத்தெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ்
ஆர். ஜி. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்.

— திருக்குறள் —
மூலமும் சொற்றுறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துள்ளது மாணவர்களுக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.
விலை அணு 12. வி. பி. செலவு வேறு.
கலாநிலயம், புரசை, சென்னை.

:: உத்தம தோழன் ::

அறியாமையினால் ஆபத்தில் அகப்பட்டு அல்லல்படும் காலத்தில் உங்கள் இடுக்கண்களைப் போக்கி இராஜவழியென்னும் ஆரோக்கிய சம்பத்தில் வைப்பது எங்கள்
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்தான்
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1. விவரம் வேண்டுவோர் எங்கள்
காம சாஸ்திரம்
என்னும் புஸ்தகத்தை வரவழைத்து வாசியுங்கள். இனாமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the P. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)